# ஒய்வூதியகாரருடன் படையினர் வெளிவந்ததால் யாழ்நகரில் பதற்றம்

விலை ரூபா 1-25

ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 ஆவணி 13 ஜுலிகல் 22 இதழ் 200

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 29-8-1986

யாழ்ப்பாணம், வெள்ளி

கோட்டை முகாமிலிருந்து நேற்றுக்காலை இராணுவத்தினர் ஓய்வூதியம் பெறச் சென்றவர்களுடன் வெளியில் வந்த போது பெரும் பதற்றம் ஏற்பட்டது.

கோட்டைக்கு வெளியில் ''டையினர் வருவதாக கிடைத்த தகவலைத் தொடர்ந்து யாழ். நீதிமன்ற ஊழியர்கள், சட்டத்தரணிகள், கட்சிகாரர்கள் முன்வாசலினூலும் பின்பக்கத்தினூலும் அவசரமாக வெளியேறினர்கள்.

கோட்டைக்கு ஓய்வூதியம் பெறச்சென்ற சுமார் 200 பேர் ஓய்வூதியம் பெற்ற பின் திரும்பிவந்தபோது வாசலில் நின்ற இராணுவ 'சென்றி' அவர்களை தடுத்து நிறுத்தியதாக கூறப்படுகிறது.

சிவில் உடையில் வந்த படையினர் சிலர் ஓய்வூதியக்காரார்

(4ம் பக்கம் பார்க்க)

## போராளி குழுத் தலைவர்களுடன் பேச்சுக்கள் நடத்த அமைச்சர் குழு புதுடில்லி செல்லும்

கொழும்பு, வியா

இலங்கை இனப்பிரச்னைத் தீர்வுக்கு அரசாங்கம் முன் வைத்துள்ள உத்தேசமாகாண சபைகள் யோசனை தொடர்பாகத் தமிழப் போராளிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அமைச்சர் குழுவொன்று அடுத்த மாத முற்பகுதியில் புதுடில்லி செல்லவுள்ளதாக நம்பப்படுகிறது.

நிதியமைச்சர் ரொனி டி மெல், நீதியமைச்சர் நிஸங்க விஜயரத்ன. காணி, காணி அபிவிருத்தி, மகாவலி அபிவிருத்தி அமைச்சர் காமினி திஸாநாயக்க, கல்வி அமைச்

(4-ம் பக்கம் பார்க்க)

### கும்புறுப்பிட்டி படையினர்முகாமில்உட்பூசல்:

# இரு இராணுவ அதிகாரிகள் ஒரு சப்இன்ஸ்பெக்டர் கொலை

## சம்பவத்திற்கு பொறுப்பான சிப்பாய் தற்கொலை

மூதூர், வியாழன்

கும்புறுப்பிட்டி இராணுவ முகாமில் இடம்பெற்ற அசம்பாவித சம்பவமொன்றையடுத்து இரு இராணுவ அதிகாரிகள், ஒரு சப் இன்ஸ்பெக்டர் கொலை செய்யப்பட்டுள்ளனர். இச்சம்பவத்திற்குப் பொறுப்பாகவிருந்த சிப்பாய் தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

இச்சம்பவம் நேற்றிரவு9 30 மணியளவில் இந்த இராணுவ முகாமில் இடம்பெற்றது. இம் முகாமில் உள்ளவர்களிடையே ஏற்பட்ட உட்பூசலால் இந்த இரு இராணுவ அதிகாரிகளும் சப் இன்ஸ்பெக்டரும் சுட்டுக் கொலை செய்யப்பட்டனரெனக் கூறப்படுகிறது

கொலை செய்யப்பட்ட சப் இன்ஸ்பெக்டர் ரஞ்சித் எடவத்த (வயது 23), லெப்டினன்

(4ம் பக்கம் பாரிக்க)

### மாங்குளத்தில்—

## நேரடி மோதலில் 3 இராணுவம் பலி

### புலிகள் அறிவிப்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

மாங்குளம் இராணுவமுகாமிலிருந்து மீண்டும்கிளிநொச்சி நோக்கி வந்துகொண்டிருந்த இராணுவத்தினரை எதிர்த்து தமிழீழவிடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தியதில் 3 இராணுவத்தினர் பலியானதாகவும், சிலர் படுகாயமுற்றதாகவும் அறிவிக்சப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் காலை இத் தாக்குதல் சம்பவம் இடம் பெற்றது.

இச்சம்பவம் குறித்து விடுதலைப்புலிகள் விடுத்துள்ள

(4ம பக்கம் பார்க்க)

## கூட்டணி நம்பிக்கை

கொழும்பு, வியா.

கூட்டணியினரின் வேண்டுகோளுக்கிணங்க பயங்கரவாத தடைச்சட்டம், அவசரகாலச் சட்டங்களின் கீழ் தடைமுகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 160 இளைஞர்கள் மிக விரைவில் விடுதலை செய்யப்படுவார்களெனவும் மேலும் 60 பேர் சிறிது காலத்திற்குள் விடுதலை செய்யப்படுவார்களெனவும் கூட்டணி வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளன. (கே)

## லண்டன்'டைம்ஸ்' கருத்து

(லண்டன் ஆகஸ்ட் 28)

இலங்கை அரசாங்கத்திற்கும் த. வி. கூட்டணிக்கும் இடையில் தற்போது நடைபெறும் இரண்டாம் சுற்று பேச்சுவார்த்தைகள் மூலம் தமிழர் பிரச்னைக்குதீர்வு காணும் முடிவு எதுவும் ஏற்படப்போவதில்லை என்று லண்டனில் இருந்து வெளிவரும் பிரபல ஆங்கிலப் பத்திரிகையான 'ரைம்ஸ்' கருத்து தெரிவித்துள்ளது. (சி)

## இராணுவம் சுட்டதில் இளைஞர் ஒருவர் பலி

வவனியா, வியா

வவனியாவில் நேற்றுக்காலை மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த இரு இளைஞர்களை நோக்கி இராணுவம் துப்பாக்கிப்பிரயோகம்செய்தபொழுது ஒருவர் ஸ்தலத்திலே கொல்லப்பட்டார். மற்றவர் தப்பியோடி விட்டார்

இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது; நேற்றுக்காலை வவனியா யாழ்ப்பாண வீதியில் தறனட்ட கல்லு என்ற இடத்தில் இரு இளைஞர்சள் மோட்டார் சைக்கிளில் வந்த பாழுது அங்குள்ள பற்றை மறைவில் ஏற்கனவே மறைந்திருந்த இராணுவத்திதுர் அவர்களை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்த பொழுது ஒருவர் ஸ்தலத்திலே கொல்லப்பட்டார். மற்றவர் தப்பியோடிவிட்டார்.

இறந்தவரின் சடலம் தறனட்ட கல்லுச் ந்திக்கு இராவத்தால் எடுத்துவரப்பட்டு அங்குள்ள மரமொன்றில் தலைகீழாக தொங்கவிடப்பட்டது.

[4ம் பக்கம் பார்க்க]

### கோட்டைக்கு சமீபமாக—

## 'புளொட்'டின் மேலும் இரு மண்மூடை அரண்கள்

யாழ்ப்பாணம், வெள்.

யாழ். நகரில் கோட்டை முகாமைச் சுற்றியுள்ள பகுதியில் மேலும் இரு மண்மூடை அரண் அமைக்கப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் சத்திரத்து சந்திக்கு சமீபத்தில் அமைக்கப்பட்ட அரண் மேலும் பலப்படுத்தபபட்டுள்ளது

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு முன்பாக மண் மூடைகளிலான அரண் ஒன்றும், யாழ் நவீன சந்தை பகுதியில் மற்றொரு மண்மூடைகளிலான அரண் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளன.

இவ்வரண்களில் ஆங்கிலத்தில் புளொட் என எழுதப்பட்டுள்ளது. (ச)

## மட்டக்களப்பு - ஏருவூரில் பலத்த சோதனை

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்புமுதல் ஏருவூர் வரையுள்ள பிரதான வீதயிலுள்ள மதகுகள் இருமருங்குமுள்ள வீடுகள் சட்டிடங்க அனைத்தும் நேற்று ஆயுதப் படையினரல் பலத்த சோதனையிடப்பட்டது.

ஏருவூர் முகாமிலிருந்து ஒரு கோஷ்டியினரும்மட்டக்களப்பு முகாமிலிருந்துமற்றொருகோஷ்டியினரும் எதிரும் புதிருமாக இச்சோதனையிலீடு பட்டிருந்தனர்.

இச்சோதனையின் போது எதுவித அசம்பாவித சம்பவங்களும் இடம்பெறவில்லை. (மா)

## சட்டவிரோத மின்பாவனை புலிகள் மீண்டும் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், வெள்ளி

சட்டவிரோதமாக மின்சாரத்தைப் பயன்படுத்துவதால் தமிழ்ப்பிரதேசங்கள் இருளில் மூழ்கும் அபாயம் ஏற்படலாமென்று தமிழீழ விடுதலைப் புலிகள எச்சரிககை விடுத்துள்ளனர்.

சட்டவிரோத மின்பாவனையால் ஏற்படும் அபாயநிலைகள் குறித்து பத்திரிகை அறிக்கைகள், துண்டுப்பிரசுரங்கள், சுவரொட்டிகள் மூலம் முன்னர் பல தடவை விடுதலைப்புலிகள் பொதுமக்களுக்கு பலவிதமாக அறிவுறுத்திவிருந்தது தெரிந்ததே

இவ்வறிவுறுத்தல்கள் குறித்து பொதுமக்களில் பலர் இன்னமும் எதுவித அக்கறையும் செலுத்தாது அசமந்தமாக இருப்பதைத் தொடர்

[4-ம் பக்கம் பார்க்க]

### கூட்டணியினரின்—

## கோரிக்கை பரிசீலிக்காவிடில் பேச்சுக்களில் பலனில்லை

### 'இந்து'வுக்கு தகவல்

சென்னை, ஆக. 28

தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் குறைந்தபட்சகோரிக்கையான மொழிவாரி மாநில அமைப்பைப் பேச்சுவார்த்தைக்கு ஒரு அடிப்படையாக ஏற்றுக்கொள்ளாதவரை தொடர்ந்தும் பேச்சுவார்த்தையை நடத்துவதில் எதுவித பிரயோசனமுமில்லையென, கூட்டணியின் தூதுக்குழுவில் பங்கு பற்றிய அங்கத்தவரொருவர் இந்து'ப்பத்திரிகைக்குத் தெரிவித்துள்ளார்.

தன்னை இனங்காட்டிக் கொள்ளவிரும்பாத அந்த அங்கத்தவரை மேற்கோள் காட்

(4ம் பக்கம் பார்க்க)

### சகல கட்சிகளும்—

## பேச்சுக்களில் பங்குபற்ற இந்தியா உதவவேண்டும்'

கொழும்பு, புதன்

''இன்றைய சூழ்நிலையில் சகலரோடும் பேசக்கூடிய ஒரே அமைப்பு இந்தியாவே எனவே தமிழ் தீவிரவாதிகள் உட்பட சம்பந்தப்பட்ட சகல கட்சிகளையும் பேச்சுவார்த்தைகளில் பங்குபற்ற வைக்க இந்தியா உதவவேண்டும்''.

இவ்வாறு தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித்

(4ம் பக்கம் பார்க்க)

# அரி விளம்பரம்

## விற்பனைக்கு

மைசூர் அரிசி நம்பர்-1 கல்லில்லாதது, சுத்தமானது, தரமானது சுவையானதும்கூட. கைதேர்ந்த தொழிலாளர்களால் இயந்திரமூலம் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டது. உங்கள் சகலதேவைகளுக்கும் எங்கும் கிடைக்கும் மைசூர் அரிசியையே கேட்டு வாங்குங்கள். ஒருமுறை பாவித்தால் உண்மை விளங்கும் தயாரிப்பாளர்-மைசூர் அரிசி ஆலை, மானிப்பாய் C 4200

## சேவை

தரமான தெளிவான போட்ரோஸ்ரற் பிரதிகள், ரூேணியோ பிரதிகள் தமிழ்-ஆங்கில ரைப்பிங் வேலைகளுக்கு: கிளீன்கட். இல; 239, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி இல; 22823 [C4234)

Transformers - டெக், ரீவி, றேடியோ, பற்றறிசாயர் வெல்டிங் சகல ரான்ஸ்போமர்களும், கிறைண்டர்களும் உத்தரவாதத்துடன் றீவைண்டிங் செய்யப்படும். Omega, Manipay Road, Jaffna. (ஈழநாட்டிற்கு எதிரில்) C 4271

## வகுப்புகள்

Computer Programming (Basic), Radio and T V. Repairing Wiring Draughtsmanship. Mechanical Draughtsmanship புதிய பிரிவுகள் ஆரம்பம்; 30-8-86. விபரங்கட்கு, Able Technical Studies K. K. S Road, Chunnakam (சுன்னாகச்சந்தியிலிருந்து 150 யார் வடக்கே). C 4257

A/L பரீட்சை எழுதியவர்கட்கு அரிய சந்தர்ப்பம். புதிய தொழில்நுட்ப வகுப்புகளான Electronic Engineering, Radio and T. V. (Antenna, Deck) வெல்டிங், வயறிங், மோட்டார் மெக்கானிசம், மோட்டார் வைன்டிங், தட்டெழுத்து, சுருக்கெழுத்து ஆரம்பமாகவுள்ளன. சான்றிதழ் பெறுமதியானது. வெளிநாடு செல்பவர்கட்கு விரைவில் Courses முடிக்கப்படும். Vispa Engineering Aid Hall (ஆனைப்பந்திச் சந்திக்கருகாமையில்), 328, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (C 4247)

## A/L 87

துய பிரயோககணிதம்

பகல் நேர வகுப்பு

**ஆரம்பம்: 5-9-86**

10-30: காவிகள்

11-45: அட்சரகணிதம்

ஆசிரியர்: ரவிமோகன்

யாழ்ப்பாணம்.

(வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோவிலுக்கும் இடையில்)

C 4273

## விற்பனைக்கு

நவீன, வீட்டுத் தளபாடங்கள், அல்மாரி, கட்டில், மெத்தைகள், கண்ணாடிமேசைகள், எழுதுமேசைகள், Formica சாப்பாட்டு மேசைகதிரைகள், Baby Cot, சிங்கர் எலக்ரிக் தையல்மெசின், Book Self, Meat Safe, பித்தளைக் குத்து விளக்குகள், கிடாரம், சில்வர் பொருட்கள், பீங்கான் கிளாஸ் வகைகள், T.V Stand, டெக், T.V, பெரியபித்தளை பூச்சாடிகள், Showcase, பற்பல உடன்விற்பனைக்கு. 326 பிரதான வீதி, யாழ்ப்பாணம் (St. Charles பாடசாலை அருகில்). (C 4305,

## தேவை

கிளிநொச்சியில் ஆரம்பிக்கப்படும் தனியார் பெண்கள் பாடசாலைக்கு பகுதி முழு நேர விஞ்ஞான, ஆங்கில, தமிழ் பெண் ஆசிரியர்கள் தேவை குறைந்த தகுதி A/L மூன்று பாடம் இருப்பிட வசதி உண்டு. விளம்பரஇல: C 4244 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். C 4244

நியூ சயன்ஸ் அக்கடமி 310. மணிக்கூட்டு வீதியில் காசாளர்/லிகிதர் வேலை செய்யக் கூடிய பெண்தேவை. 35 வயதுக்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது மேற்குறிப்பிட்ட விலாசத்துடன் தொடர்பு கொள்க. (A 1201)

கணக்குத்துறையில் 7 வருட அனுபவமுள்ள ஒருவருக்குமுழு நேர அல்லது பகுதிநேரவேலை தேவை. அத்துடன் வருமான வரிக்கு ஏற்றமுறையில் கணக்குகள் எழுதிக் கொடுக்கப்படும் தொடர்பு கொள்ள வேண்டிய விலாசம்: 232, நாச்சிமார் கோவில்வீதி, திருநெல்வேலிதெற்கு, திருநெல்வேலி. (பல்கலைக்கழகத்திற்கு முன்பாக) (C 4283,

பழுதடைந்த, உபயோகிக்க முடியாத கிறைண்டர் மின்விசிறி, மோட்டர் மின் அடுப்பு, ஸ்ராட்டர் ஆகியன வாங்கப்படும். திருத்தியும் கொடுப்போம். Omega, Manipay Road, Jaffna. (ஈழநாட்டிற்கு எதிரில்). (C4307)

தையல்வேலையில் அனுபவம் உள்ள பெண்கள் உடன் தேவை. யாழ் மாநகர சபைக் எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. தொடர்பு கொள்க: பரிஸ் ரெக்ஸ், 153, மின்சாரநிலையவீதி, யாழ்ப்பாணம். (C 4302)

### சேவை

உபயோகித்த தளபாடங்கள், மற்றும் பாவனைப் பொருட்களை விற்பனை செய்யவோ அல்லது பழையதளபாடங்களைமாற்றிபுதியநவீன தளபாடங்களைபெற்றுக் கொள்ள விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும்; M Thiagarajan 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (St Charles பாடசாலைக்கு அருகில்) (C4306)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## வீதி திருத்த கோரி மகஜர்

பண்டத்தரிப்பு, வியாழன்

பண்டத்தரிப்பு - மாதகல் பிரதான வீதி நீண்டகாலமாக திருத்தப்படாத நிலையில் குண்டும் குழியுமாக மக்கள் போக்குவரத்திற்கு மிகவும் சீர் கெட்ட நிலையில் இருந்து வருகின்றது.

இந்த வீதியை விரைவில் திருத்தியமைக்க உதவுமாறு மாதகல் விபுலானந்தர் கிராம அபிவிருத்திச் சங்கம் சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் யாழ். பெரும் தெருக்கள் திணைக்கள பொறியியளாளர் ஆகியோரை மகஜர் ஒன்றின் மூலம் கோரிக்கை விடுத்துள்ளது. (எ)

கலர் பிலிம் சுருள்களை PROCESSING + PRINTING செய்வதற்கு கொழும்பு ஸ்ருடியோ

(A 1041)

## A/L 87

தூய, பிரயோககணிதம்

By

Mr. சுந்தரகுமார்

ஆரம்பம்: 1-9-86

விபரங்கட்கு:

New Science Academy

B.M.C. க்கு முன்பாக, யாழ்ப்பாணம்.

(A 1085)

## கேள்வி விளம்பர அறிவித்தல்

சண்டிலிப்பாய் மத்திய மக்கள் சந்தையில் மாட்டு, ஆட்டு இறைசிக்கடைகள் இரண்டுக்கு, கேள்விப்பத்திரம் கோரப்படுகிறது. விரும்பியவர்கள் 31-8-86 ஞாயிறுகாலை 11 மணிக்கு, சண்டிலிப்பாய் வாணிநிவேதன வித்தியாசாலையில் இயங்கும் விழிப்புக்குழுவிற்கு நேரில் விண்ணப்பிக்கவும். விண்ணப்பப்பத்திரம், ஒன்றுரூபா 25/-செலுத்தி விழிப்புத்குழுவில் பெற்றுக் கொள்ளலாம்.

1-9-86 முதல் 31-12-87 வரை கடைநடத்த உரிமையுண்டு. கேள்வியின் 1/3 பகுதி சட்டுப்பணம்உடனேசெலுத்த வேண்டும்.

தலைவர்.

(C 4303)

## சமாதானசபை தீர்த்தது

நெல்லியடி, வியாழன்

கடந்த நான்கு ஆண்டுகளாக காதலித்துவந்த யுவதியைக் கைவிட்டு வேறொரு பெண்ணை மணக்க முயற்சிப்பதாக யுவதி செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்து துன்னாலை தெற்கு சமாதானசபை விசாரணை செய்தபின் இளைஞனின் போக்கு தவறானது என்பதை உணர்த்தியதுடன் சமாதானசபை மண்டபத்திலேயே இருவருக்கும் பதிவுத் திருமணத்தை நடாத்திவைத்தது. [எ]

## Sakura Photo Suppliers,

## சகுரு போட்டோ சப்ளையர்ஸ்,

233/1-1, கஸ்தூரியார்வீதி, (மேல்மாடி) யாழ்ப்பாணம்.

'SAKURA' உற்பத்தியாளர்களின் புதிய 'KONICA' (கொனிக்கா) கலர் பிலிம் 135/36 எங்களிடம் விற்பனைக்குண்டு. அறிமுகவிலையாக ரூபா 63-00க்கு விற்கப்படும் (WHOLESALE - மொத்தவிற்பனை).

கலர்பிலிம் சுருள்கள் (PROCESSING) செய்வது ரூபா 5-00 P. C. ஆகக் குறைத்துள்ளோம்.

[C-4294]

யாழ். பல்கலைக்கழக

## பட்டமளிப்பு விழா - 1986

மேற்படி விழாவில் கலந்துகொள்ளும் பட்டதாரி மாணவர் அனைவருக்கும்

எமது வாழ்த்துக்கள்!

வசதியாக காலதாமதமின்றி படம் பிடித்துக்கொள்ள (கலர் - கறுப்பு / வெள்ளை)

## ஞானம்ஸ் ஸ்ருடியோ

உங்களை அழைக்கின்றது.

பட்டதாரி மேலங்கிகள் (CLOAKS) எம்மிடம் உண்டு.

[C-4289]

உ

## திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் அக்ஷய வருஷம் ஆவணி மாதம் 15ந் திகதி ஞாயிற்றுக்கிழமை (31-08-1986) காலை 9 மணிமுதல் 10-30மணி வரையிலான சுபவேளையில்,

| மணமகன் | மணமகள் |
| --- | --- |
| செல்வன் | செல்வி |
| இராஜமுத்தையா தவபாலன் | கிரிஜா இராஜரட்ணம் |

இறைவன் திருவருளால் இணுவில் மஞ்சத்தடி முருகன் ஆலயத்தில் திருமாங்கலய தாரணம செய்யப் பெரியோர்கள் நிச்சயத்திருப்பதால் அவ்வமயம் தாங்கள் குடும்பசகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

இங்ஙனம்

தங்கள் நல்வரவை நாடும்

திரு. திருமதி இராஜ முத்தையா, (ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்) முருகன் வீதி, உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

திரு. இராஜரட்ணம், (M. L. T. மன்னர் ஆதார வைத்தியசாலை)

திருமதி சி. இராஜரட்ணம் (ஆசிரியை, இணுவில் சைவ மகாஜன விததியாலயம்) கோவில் வாசல், கே. கே. எஸ். வீதி, இணுவில்.

[C-4295]

## NEW SCIENCE ACADEMY

BMCக்கு முன்பாக

A/L 87 புதிய பிரிவுகள்

### DAY CLASSES

| | |
| --- | --- |
| APPLIED PURE | Mr. A. பத்மநாதன் |
| PHYSICS | Mr. மணியம் |
| CHEMISTRY | Mr. மோகன் |
| BOTANY | Mr. பாலா |
| ZOOLOGY | Mr இளங்கோவன் |

ஆரம்பம் 1-9-86

[A 1084]

### WEEKEND CLASSES

வெக்டர் P V யின் APP and PURE MATHS சனி / ஞாயிறு 8-30 A M.

| | |
| --- | --- |
| CHEMISTRY | Mr. யூ. மணியம் |
| மின்னியல் | Mr. மணியம் |
| சடப்பொருள் | Mr. மணியம் |
| தாவரவியல் | Mr. பாலா |
| விலங்கியல் | Mr. இளங்கோவன் |

ஆரம்பம் 6-9-86

### மணிவாக்கு

உன் சொந்த நாவே உன்னைப் புகழ ஆரம்பித்து விட்டதென்றால் உனது புகழ் சிறியது, அதுவும் மங்கிக்கொண்டிருக்கிறது என்பதே அர்த்தம்.

— சேர். மத்தியுஹேல்.

## நமது நோக்கு

### கோட்டையிலிருந்து இராணுவத்தை அகற்றுக!

யாழ்ப்பாண நகரின் ஒரு முக்கிய பகுதியில் உள்ள பழங்கால கோட்டைக்குள் அமைந்துள்ள இலங்கை ராணுவமுகாமை அகற்றும்படி கோரி நேற்று முன்தினம் கடையடைப்பும் ஊர்வலமும் நடைபெற்றது. இந்தமுகாமை அகற்றவேண்டும் என்பதற்கான காரணங்களை எடுத்துக் கூறும் மகஜர் ஒன்றும் கடையடைப்பு, ஊர்வலத்துக்கு ஏற்பாடுசெய்த மக்கள் நடவடிக்கை குழுவினரால் ஜனாதிபதிக்கு யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர்மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்த முகாம் இங்கு நிறுவப்பட்ட காலம்தொட்டே இதற்கு மக்கள் எதிர்ப்பு இருந்து வந்துள்ளது என்பதைக் கூறத்தேவையில்லை.

இந்த விடயம்பற்றி நேரடியாக ஜனாதிபதியிடம் எடுத்துக் கூறுவதற்கு கொழும்புக்கு வரும்படி மேற்படி குழுவினர் அழைக்கப்பட்டிருப்பதாகவும் செய்திகள் கூறுகின்றன.

யாழ். குடாநாட்டின் பிரதான நகரமான யாழ்ப்பாணம் இப்பிரதேசத்தின் தலைநகரமுமாகும்.

இப் பிரதேசத்துக்கே பிரதானமான வசதிகள் பலவும் கொண்ட போதனா வைத்தியசாலை, பொதுமக்கள் தேவைகளுக்காக குவிந்து நிற்கும் பிரதான தபால் அலுவலகம், பஸ் நிலையம், வங்கிகள், பிரதான கல்லூரிகள், வணக்கஸ்தலங்கள் மற்றும் மாநகர அலுவலகங்கள் போன்றவை கோட்டை ராணுவ முகாமுக்கு வெகு சமீபத்திலேயே அமைந்துள்ளன.

ஏற்கனவே மாநகரசபை அலுவலகம் இயங்கமுடியாத நிலையில் வேறு இடத்துக்கு மாற்றப்பட்டு விட்டது

நகரமண்டபம் குண்டடிபட்டு தகர்ந்து போய்க்கிடக்கின்றது எரியுண்ட நூல்நிலையம் சிரமைக்கப்பட்டும் செயல்பட முடியவில்லை. தபால்ஊழியர்கள் தினமும் உயிரைக்கையில் பிடித்துக்கொண்டு வேறு இடத்துக்குப் போவதும் வருவதுமாகப் பணிபுரிகின்றார்கள். தொலைபேசி தொடர்பகம் இயங்கமுடியாமல் இருக்கின்றது. கோட்டையில் அடுத்தமைந்த கட்டிடங்களெல்லாம் பாழடைந்து போகின்றன.

இன்னும் தினசரி நடக்கும் போராட்டமும், ஷெல்வீசும் காரணமாக கொட்டடி, குருநகர் போன்ற அண்மையில் உள்ளபகுதிகளில் பரம்பரையாக வாழ்ந்துவந்த மக்கள் அநேகர் வீடுவாசல்களை விட்டு வேறு இடங்களுக்கு போய்விட்டார்கள்

போராட்டம் தொடர்கின்றது ராணுவம்கோட்டையைவிட்டு வெளியில் வரமுற்படுகின்றது. போராளிகள் குண்டெறிந்து தடுக்கிறார்கள். கோட்டைக்குள் திரும்பும்படையினர் ஷெல்வீசுகிறார்கள் அவை மக்கள் வதியும்பகுதிகளில் வீழ்ந்து அப்பாவி மக்கள் அநியாயமாகக் கொல்லப்படுகிறார்கள்.

சமீபகாலம்வரை இந்தநிலை நிகழ்ந்து வந்தது. இப்பொழுதுகதை வேறுவிதமாகக்கூறப்படுகின்றது.

கோட்டைக்குள் போராளிகள்தான் முதலில் குண்டடிக்கிறார்கள், அதைத் தொடர்ந்து பதில் நடவடிக்கையாகஇராணுவமும்திருப்பித்தாக்குகிறது. அதனால் அப்பாவிகள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதே அது.

இந்தக் கதைமாற்றத்துக்கு கொழும்பில் நடைபெறும் பேச்சுவார்த்தைகள் ஒரு காரணமாக இருக்கலாம்.

அமைதிப்பேச்சுக்கள் ஒருபுறம் அப்பாவி மக்களை அழிப்பது மறுபுறம் என்ற குற்றச்சாட்டை மறுதலிக்கவே இந்த முயற்சி.

யார் முதலில் தாக்குகிறார்கள் என்பதைப்பற்றிய பிரச்னை இங்கு அவசியமில்லை. இந்தப் பிரதான நகரில் இப்படி ஒரு இராணுவமுகாம் இருப்பதனால் அரசுக்கோ, இங்குள்ள பொதுமக்களுக்கோ எதுவித நன்மையும் இல்லை என்பதே உண்மை நிலை இராணுவம் கோட்டையில் இருந்து வெளியில் நடமாடும் நிலை ஏற்படுமாகில் யாழ்ப்பாணநகரமே வெறிச்சோடிப்போகும். தனித்துவமான கலாசாரத்துக்குப் பேர்போன யாழ்ப்பாண நகரத்தை ஒரு சூன்யப்பிரதேசமாக ஆக்கிவிட்டு உலகின் நல்லபிப்பிராயத்தை அரசு சம்பாதிக்கமுடியாது

எனவே இன்றுள்ள நிலையில் யாழ்ப்பாண மக்களின் கோரிக்கைக்குசெவிசாய்த்து கோட்டையிலிருந்து இராணுவத்தை அகற்றுவதே சாலச்சிறந்த காரியமாகும்.

### புத்தக வெளியீடு

யாழ்ப்பாணம், வெள்ளி

மாத்தளை ஆ. இராஜலிங்கத்தின் ''புசிய யுக நாயகிகள்'' கவிதைத் தொகுதி வெளியீட்டு விழா நாளை மறுநாள் ஞாயிற்றுக்கிழமை கோண்டாவில் வடக்கு மத்திய கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் நடைபெறும். [இ]

### கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், வெள்ளி

அச்செழு ஸ்ரீ கண்ணகை அம்மன் மகா கும்பாபிஷேகம் இன்று 29ம் திகதி கிரிஜா வைபவங்களுடன் ஆரம்பமாகி எதிர்வரும் 31ம் திகதி கும்பாபிஷேக வைபவம் இனிது நிறைவுபெறும்.

இவ் வைபவம் பிரம்மஸ்ரீ இராஜேந்திரக் குருக்கள் தலைமையில் சாம்பசதாசிவக் குருக்கள் ஏனைய குருமார்களின் உதவியுடன் நடாத்திவைப்பார். [க]

## "இரத்ததானம் செய்து எமது மண்ணில் ஏற்படும் மரணத்தைத் தவிர்ப்போம்"

### நோயாளர் நலன்புரிச்சங்கம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், வெள்ளி

''ஷெல் தாக்குதல், துப்பாக்கிச்சூடு, விமானக்குண்டு வீச்சு போன்றவற்றால் வயது பேதமின்றி அன்றாடம் எமது மக்கள் மரணமாகிக்கொண்டிருக்கிறார்கள். இதற்கு முக்கிய காரணம் பெருமளவு இரத்தம் வெளியேறுவதேயாகும். எனவே இரத்த தானம் செய்து எமது மண்ணில் ஏற்படும் மரணங்களைத் தவிர்ப்போம்'' என்று நோயாளர் நலன் புரிச்சங்கம் விடுத்துள்ள வேண்டுகோள் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் போதனா வைத்தியசாலைக்கு ஒரு நாளைக்குத் தேவைப்படும் இரத்தம் 30 போத்தலாகும். இரத்த தானம் செய்வதால் புதிய இரத்தம் உருவாக்கப்படுகிறது. இதில் காணப்படும் அணுக்கள் புதிதாக உருவாகுவதால் உடல் புத்தூக்கம் பெற்றுச் சீராகத் தொழிற்படவாய்ப்பேற்படுகின்றதுஎன்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வேண்டுகோளில் இரத்த தானம் வழங்க விரும்புபவர்களுக்கு உதவியாக நல்லூர் கந்தன் ஆலய உற்சவ தினங்களான கைலாச வாகனத் திருவிழ, சப்பறத் திருவிழா பூங்க வனத்திருவிழா நாட்களில் நல்லூர் பின்வீதியில் அமைந்துள்ள மங்கையர்கரசி வித்தியாசாலையில் நோயாளர் நலன் புரிச்சங்கம் இரத்ததான ஏற்பாட்டைச் செய்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது ஓ

## "கோட்டை முகாமை அகற்றுவது இனப்பிரச்னைக்கு நிரந்தர தீர்வு காண உதவியாக அமையும்"

யாழ்ப்பாணம், வெள்ளி

''யாழ்ப்பாணக் கோட்டையிலிருந்து இராணுவ முகாமை உடனடியாக அகற்றுவது மனிதாபிமான அடிப்படையில் மட்டுமல்லாது பாதிக்கப்படும் மக்களுக்கு பாதுகாப்பளிப்பதுடன் இனப்பிரச்னைக்கு நிரந்தரமான சுமுகத் தீர்வு காண்பதற்கும் பேருதவியாக அமையும் என்பதில் ஐயமில்லை''

யாழ்ப்பாணக் கோட்டையில் இருந்து இராணுவத்தை அகற்றக்கோரி யாழ. நகரில் மக்கள் நடவடிக்கை குழுவினரால் நேற்று முன்தினம் நடாத்தப்பெற்ற ஊர்வலம் யாழ். கச்சேரியை அடைந்ததும் யாழ் அரச அதிபரிடம் சமர்ப்பித்த மகஜரில் மேற்சண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மகஜர் ஜனாதிபதி ஜே ஆர் ஜெயவர்த்தனவுக்கு யாழ். அரச அதிபர் மூலம் அனுப்பி வைப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்டதாகும்.

இம்மகஜரில் மேலும் காணப்படுவதாவது யாழ். நகரில் வழும் அமைதியைவிரும்பும் இரண்டு லட்சத்துக்கும் அதிகமான நாங்கள் உங்களுடைய சாதகமான பரிசீலனைக்காவும் உடனடி நடவடிக்கைக்காகவும் இதனைச் சமர்ப்பிக்கிறோம்.

கோட்டைக்குளிளிருக்கின்ற இராணுவம் கால நேரமின்றி எந்நேரமும் 'ஷெல்' களை ஏவி விடுவதாலும் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்ப்பதாலும் அவை அப்பாவிப் பொது மக்களையே தாக்குகின்றன இந்த 'ஷெல்கள் மிகவும் சக்திவாய்ந்தவை அவை அழிவையே ஏற்படுத்துகின்றன. யாழ் நகரின் அன்றாட வாழ்வு குழப்பத்திலும், கலகத்திலும் ஊசலாடிக் கொண்டிருக்கிறது

யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரி கோட்டை இராணுவ முகாமிலிருந்து இருநூறு மீற்றர் தொலைவுக்குள்தான் இருக்கிறது. இந்த ஆஸ்பத்திரி கூட ஷெல் தாக்குதலிலிருந்து தப்பவில்லை

யாழ்ப்பாணம் நீதிமன்றக் கட்டிடம் கோட்டை இராணுவமுகாமிலிருந்து நூறுமீட்டர் தொலைவில்கூட அமையவில்லை உள்நாட்டி இறைவரி திணைக்களம், தொழில்திணைக்களம், தொலைபேசித் தொடர்புத் திணைக்களம் போன்ற பல அரசாங்கத் திணைக்கள அலுவலகங்கள் கோட்டை இராணுவ முகாமுக்கு எதிரிலேயே அமைந்துள்ளன. மார்பு நோய் சிகிச்சைநிலையம் மற்றும் முக்கிய வர்த்தகவங்கிகள்' நூல்நிலையம், பாடசாலைகள், தபாலகம், பத்திரிகை அலுவலகங்கள்யாவும் கோட்டை இராணுவ முகாமுக்கு நூறுமீட்டர் தூரத்துக்குள்ளேயே அமைந்துள்ளன. யாழ்ப்பாண பிரதான வர்த்தக நிலையங்கள் மத்தியபேருந்து நிலையம் என்பனவும் இராணுவ முகாமிலிருந்து நூற்றி ஐம்பது மீட்டர் தூரத்துக்குளளேயே அமைந்துள்ளன. கோயில்கள் தேவாலயங்கள், மசூதிகள் யாவும் கோட்டை இராணுவ முகாமுக்கு சமீபமாகவே இருக்கின்றன சுடுகாடுகளும் கூட இந்த முகாமுக்குச் சமீபமாகவே அமைந்துள்ளன.

இந்நிலையில் இப்பகுதியில் எந்தத் தாக்குதல் ஏற்பட்டாலும் பொதுமக்களும் பொது ஸ்தாபனங்களுமே பாதிக்கப்படுகின்றன, இத்தகைய தாக்குதல்கள் முடிவுக்கு வருவதற்கு ஒரு அறிகுறியும் இதுவரை இல்லை. அப்பாவிப் பொதுமக்களே பலியாகிக் கொண்டிருக்கின்றார்கள்.

யாழ்ப்பாண வீதிகளில்சுதந்திரமாக நடமாடவோ வீடுகளில் நிம்மதியாக இருக்கவோ நிம்மதியாக நித்திரை செய்யவோ முடிவதில்லை. எந்தச் சமயத்தில எங்கே 'ஷெல்' குண்டுகள் வந்து விழுந்து வீடுகளைச் சேதப்படுத்தும், உயிர்ப்பலி எடுக்கும் என்ற நிச்சயமற்ற நிலை. இந்த நிலையில் தான் யாழ்ப்பாண மக்கள் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு வாழ்கிறார்கள்.

அமைதியை விரும்பும் யாழ்ப்பாண மக்ளின் பரிதாபகரமான நிலையைச் சற்றுச் சிந்தித்துப் பாருங்கள். 'ஷெல்' தாக்குதலில் பலியானவர்களின் குடும்பங்களின் பரிதாப நிலையையும் அவர்கள் படும் சொல்லொணாத் துயரங்களையும் சற்றுச் சிந்தித்துப் பாருங்கள். இந்தநிலையை நன்கு சிந்தித்துப் பார்த்தால் யாழ்ப்பாணக் கோட்டையிலுள்ள இராணுவ முகாமை அகற்ற வேண்டியது தவிர்க்க முடியாததொன்று என்பதை உணர்ந்து கொள்வீர்கள். (ச)

### இலவச குழாய்க்கிணறு

யாழ்ப்பாணம், வெள்ளி

தெல்லிப்பழை துர்க்காபுரத்தில் உள்ள 'மகளிர் இல்லத்திற்கு குழாய்க்கிணறு ஒன்று அமைக்கப்படவுள்ளது

பத்தாயிரம் ரூபா செலவில் அமைக்கப்படவிருக்கும் இக் குழாய்க்கிணறு 'றெக்' என்ஜினியேஸ் உரிமையாளர் திரு. சித்திவிநாயகம்பிள்ளை அவர்களால் இலவசமாக அமைத்துக்கொடுக்கப்படவுள்ளது. [வா]

### இன்று

யாழ்ப்பாணம், வெள்ளி

கரவெட்டி மேற்கு பத்தொனிக் கிராமத்தின் சரவை வையூர் அறிவக சனசமூக நிலையத்திறப்பு விழா இன்று மாலை நடைபெறவுள்ளது. இத்திறப்பு விழாவில் கட்டைவேலி ப. நோ. கூ. சங்கத்தின் தலைவர் த. சிதம்பரப்பிள்ளை மங்கள விளக்கேற்றி வைக்க கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் இ ஐயாத்துரை நிலையத்தைத் திறந்து வைக்கவுள்ளார். (வா)

### நல்லைச் சூர்ப்பகைவன்

துள்ளுமயில் மீதேறிச் சூரவேல் கைக்கொண்டு
துள்ளிவந்த சூரரையே தூறுசெய்த- வள்ளியங்கன்
தாயநல்லைச் சூர்ப்பகைவன் துட்டர்தமை நீறுக்கி
நோய்மொடு காத்திடுவான் நேர்.

★ ★ ★ ★

நேர்த்திசெயும் நேயருக்கு நேர்முகமாய் வந்தாங்கு
சீர்த்தியுறச் சித்திகளைச் செய்திடுவான்- கீர்த்திமிகும்
சங்கிலிய மன்னரை சாண்டநல்லைச் சண்முகனர்
பொங்கவருள் செய்வானெப் போதும்.

★ ★ ★ ★

'போதும்'என்ற புந்தியுள்ள புந்தியரைப் பூமியிலே
மோதுகின்ற மோகத்தில் நீந்தவிடான்- ஓதுகின்ற
பேறுபெற்ற நல்லூரின் பேரரச ஞானகந்தன்
கூறுமருள் செய்வான்கை கூப்பு.

கவியரசு வெண்பாமணி முருகசூரியன்

[இன்று நல்லூர்க் கந்தன் 20-ம் திருவிழா]

## 2-வது ஆண்டு நினைவஞ்சலி



அமரத்துவப் பனிமலர்
செல்வி அப்புத்துரை நாகநந்தினி
(குஞ்சம்மா)
மலர்வு: 08-02-1962
உதிர்வு: 21-08-1984

இதய மகளுக்கு இதய சமர்ப்பணம்!
நாகமகள் நந்தினியே நம் இனிய கண்மணியே தோல் விழிக் குஞ்சம்மா ஞாலம் பகைத்ததோ நம்மை விட்டுப் பறந்த தனையோ காலன் .பறித் தனனே கலங்குதம்மா நெஞ்சமலர் ஆறுத்துயர் பூக்கள் அஞ்சலித்தோம் உன் கழற்கே ஈசனடி சேர்ந்தென்றும் வாழ்க இன்றும் என்றும் அன்புடையவளே உனது பிரிவால் துயருறும்

அன்பு ஐயா, அம்மா அண்ணமார், அக்காவும், தங்கைமார், தம்பிமாரும் மற்றும் உறவினரும் அன்பின் நண்பிகள்.

தெய்வமே உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்

வி. அப்புத்துரையும்' குடும்பத்தினரும்.

கோவில் கமம்,
பரந்தன். (C 4315)



## கடைசி நேர வரி விளம்பரம்

### தேவை

ஹோட்டல் வேலைகள் சகலவற்றிலும் நன்கு அனுபவம் உள்ளவர்கள் உடன் தேவை. மலையகத்தைச் சேர்ந்தவர்கள் விரும்பத்தக்கது. நேரில்வரவும் றிக்கோ ஹோட்டல், 370, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (C-43↓3)



**ரியோ**
காலை 10-30, 2-30, 4-30, 6-30.
பாக்கியராஜ்-அம்பிகா நடித்த
**அந்த 7 நாட்கள்**
[கலர், புதிய பிரதி]

**வெலிங்டன்**
வெண்திரையில்
10-30, 2-30, 6-30
Su Sanah York-AlanBates
John Hurt
in
**The Shout**
New Release


# கடற்றொழிலாளர்களுக்கு மீண்டும் உணவு முத்திரை

சுண்டிக்குளி, வெள்ளி
யாழ். மாவட்ட கடற்றொழிலாளர்களுக்குரிய விசேஷ உணவு முத்திரைகள் நேற்று முன்தினம் கொழும்பிலிருந்து யாழ். சமூகசேவைப் பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இவ்வுணவு முத்திரைகள் கடந்த மே மாதத்தின்பின்னர் இவர்களுக்கு வழங்கப்படவில்லை. தற்போது அனுப்பி வைக்கப்பட்டுள்ள இவ்விசேட உணவு முத்திரைகள் ஜூன், ஜூலை, ஆகஸ்ட் மாதங்களுக்குரியவை என்றும் இவை அடுத்த வாரத்தில் யாழ் மாவட்டத்திலுள்ளசகலஉதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களுக்கும் அனுப்பிவைக்சப்படுமென்றும் யாழ். சமூக சேவைப்பகுதி உதவிப்பணிப்பாளர் திருமதி சிவசிதம்பரம் தெரிவித்துள்ளார்.

உதவி அரசாங்க அதிபர்கள் மூலம் இவ்வுணவு முத்திரைகள் உரியவர்களுக்கு வழங்கப்பட்டதும் மூன்று மாதத்திற்குரிய உணவுப்பொருட்களையும் ப. நோ. கூ. சங்கக்கிளைகளில் ஒரே தடவையில் பெற்றுக் கொள்ளலாமெனவும் கூறப்படுகிறது

இவ்விசேட உணவுமுத்திரைகள் யாழ். மாவட்டத்தில் ஏறக்குறைய 55,000 கடற்றொழிலாளர் குடும்பங்களுக்கு முன்னர் வழங்கப்பட்டுவந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

## ஓராண்டு பூர்த்திவிழா

யாழ்ப்பாணம், வெள்ளி
செல்வா ஐக்கிய கலாசார சனசமூக நிலையத்தினரின் ஓர் ஆண்டு பூர்த்தி விழாவும் பொதுக் கூட்டமும் நாளை சனிக்கிழமை மாலை 5 மணியளவில் நிலைய அரங்கில் தெல்லிப்பழையில் நடைபெறவுள்ளன.

பிரதம விருந்தினராக திரு. சி. சிவமகாராசாவும் விசேட விருந்தினராக திரு ச. பத்மநாதனும் [சிறு குழந்தை வைத்திய நிபுணர் தெல்லிப்பழை] கலந்து கொள்ளுவார்கள்.

மற்றும்பல அறிஞர்களின் சொற்பொழிவு நிகழ்ச்சிகளும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன.

## நிலாவெளி அகதிகள்

பச்சிலைப்பள்ளி, வியா.
நிலாவெளி அகதிகள் முகாமிலிருந்து 14 தமிழ் அகதிக் குடும்பங்கள் கடந்த சனிக்கிழமை பருத்தித்துறை கிழக்கிலுள்ள வத்திராயன் அகதிகள் முகாமை வந்தடைந்தனர்.

வத்திராயன் அகதிகள் முகாமில் ஏற்கனவே திருமலையிலிருந்து வந்த நூற்றுக்கு மேற்பட்ட தமிழ் அகதிகள் பராமரிக்கப்பட்டு வருகிறார்கள். தற்போது வந்து சேர்ந்த நிலாவெளி அகதிக் குடும்பங்களில் சுமார் 60 பேர் உள்ளனர்.


## அந்தியேஷ்டி அழைபபு



திருமதி
சாந்தநாயகம் செல்லையா

31-7-86 தினம் சிவபதமடைந்த எமது தாயார் திருமதி சாந்தநாயகம் செல்லையா அவர்களின் அந்தியேஷ்டி, வீட்டுக் கிருத்திய வைபவம் 30-8-86 சனிக்கிழமை நடைபெறும். உறவினர்களும், நண்பர்களும் இவ் வைபவத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

மக்கள்:
செ. நடராசா,
செ. சுப்பிரமணியம்,
செ மகேஸ்வரன்,
செ. கந்தசாமி.

சரசாலை வடக்கு,
சரசாலை.
[A 1202]


## போராளி குழு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் இக்குழுவில் இடம்பெறுவர்.

## கூட்டணியின...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டிச் செய்திபிரசுரித்த 'இந்து'ப் பத்திரிகை, மொழிவாரி மாநிலக் கோரிக்கை தொடர்பாக எதுவித பேச்சுவார்த்தையும் இதுவரை நடைபெறவில்லையெனக் கூறினாரெனத்தெரிவித்துள்ளது.

## இராணுவம்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

இச்சம்பவத்தின்போது இளைஞர்கள் பயணம் செய்தமோட்டார் சைக்கிள் இராணுவத்தால் எடுத்துச் செல்லப்பட்டதுடன்இறந்தஇளைஞரின் சடலமும் மரத்திலிருந்து இறக்கப்பட்டு இராணுவத்தினரால் கொண்டு செலலப்பட்டது. [ஓ]

## சகல கட்சி..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அத்துலத்முதலி பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

''கூட்டணிக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறும் பேச்சுவார்த்தைகள் முடிவடைவதை தொடர்ந்தே இந்த சமாதான முயற்சியின் அடுத்த நடவடிக்கைகளின் நிலைமையை முழுமையாக தீர்மானிக்கலாம்.

இதுவரை பேச்சுவார்த்தைக்கு சம்மதம் தெரிவித்த சிலரோடு மாத்திரமே பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. இனி இதுவரையில் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளாதவர்களையும் பங்குபற்றச் செய்வதன் மூலம்தான் பரந்த அளவிலான இணக்கத்தை காணமுடியும்.

இன்றைய பேச்சுவார்த்தைகளின் முடிவில் மகாண சபைகளை நிறுவுவது தொடர்பான அரசியல் அமைப்புத் திருத்தத்திற்கான பாராளுமன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடிய நிலையில் அரசாங்கம் ஓரளவு உள்ளது.''

எனினும் சர்வகட்சி மாநாடு இனிமேல் கூட்டுவது தற்போதைய பேச்சுவார்த்தையின் முடிவிலேயே தங்கியுள்ளது என்றார். [சி-எ]

## தொலைபேசி இயங்கவில்லை

யாழ்ப்பாணம். வெள்ளி
யாழ் கல்வித் திணைக்களத்தின் தொலைபேசிகள் கடந்த ஒருமாதகாலமாக இயங்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

யாழ் கல்வித்திணைக்களத்தினர் கொழும்பு கல்விஅமைச்சுடனும், ஏனைய பிராந்திய பாடசாலைகளுடனும் தொடர்பு கொள்தற்கு தொலைபேசிகள் இயங்காமலிருப்பது பெரிய கஷ்டத்தை தோற்றுவித்துள்ளதாக தெரியவருகிறது. [ச]

## கல்வி பணிப்பாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், வெள்ளி
நல்லூர்கந்தசுவாமி கோவில் சப்பறம், தேர், தீர்த்தம் நடைபெறவிருப்பதால் நல்லூருக்கு மிக அண்மையிலுள்ள பாடசாலைகள் குறித்த அந்தத் தினங்களில் விடுமுறை வழங்கிக் கொள்ள விரும்பினால் யாழ். கல்விப் பணிப்பாளருடன் இன்று தொடர்பு கொள்ளலாம் என்று கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். [ச]

## அகதிகளுக்கு உதவி

நெடுந்தீவு, வியாழன்
அண்மையில் கிளிநொச்சியில் ஏற்பட்ட வன்செயலில் இடம் பெயர்ந்து உருத்திரபுரம் மகாவித்தியாலயத்தில் முகாமிட்டு இருந்த அகதிகள் மீண்டும் அங்கிருந்து வெளியேறி கைதடிப் பாடசாலை ஒன்றில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

அகதிகளாக இடம் பெயர்ந்து வந்த 35 க்கு அதிகமான குடும்பங்கள் நுணுவிலில் தனித்தனியாக தற்காலிக குடிசையில் அமைந்து குடியேறி உள்ளனர்.

இந்த அகதிகளுக்கான சகல உதவிகளையும் அறவழிப்போராட்டக்குழு செய்து கொடுத்துள்ளது. (வா)

## நேரடி மோத...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: ராணுவத்தினர் மாங்குளம் இராணுவ முகாமிலிருந்து நேற்றுமுன்தினம் நடைபவனியாகவும், கவச வாகனங்களிலும் கிளிநொச்சி முகாமை நோக்கி வந்தபோது எம்மால் 'சிலிண்டர்' தாக்குதலும்' 'கனன் சார்ஜ்' தாக்குதல்களும் மிகக்கடுமையாக மேற்கொள்ளப்பட்டது இதில் 3 இராணுவத்தினர்இறந்திருக்கலாமென நம்பப்படுகிறது சிலர் படுகாயமுற்றனர். இரு ஹெலிகொப்டர்கள் இராணுவத்தினருக்குப் பாதுகாப்பாகத் தாக்குதல் மேற்கொண்டன''. [மா]

## ஒய்வூதிய...

[1ம பக்கத் தொடர்ச்சி]

களுடன் வீதிக்கு நடந்துவந்ததாகவும், பொலிஸ் நிலைய பாலத்தடிக்கு வந்ததும், படையினர் ஒரு கருவியை நிலத்தில் வைத்து சோதனை செய்ததாகவும் கூறப்படுகிறது. படையினரில் சிலர், சீருடையில் துப்பாக்கிகளுடன் வந்ததாகவும் ஒய்வூதியக்காரர் ஒருவர் தெரிவித்தார்.

ஒய்வூதியக்காரருடன் படையினர் வருவதை அறிந்த போராளிகள் எதிர்ப்பக்கத்தில் நின்று துப்பாக்கிப் பிரயோகம் செய்தபோது படையினர்முகாமுக்குத் திரும்பிச் சென்றுவிட்டனர் என்றும்: அவர் மேலும் தெரிவித்தார்.

இதன்பின் ஒய்வூதியக்காரர்கள், பிரதானவீதியினூல் ஓடிச் சென்றபோது கோட்டையிலிருந்து 'ஷெல்' தாக்குதல்மேற் கொள்ளப்பட்டது. (இ-எ)

## மின் கம்பத்தில் இரு சடலங்கள்

(மட்டக்களப்பு நிருபர்)
ஏறுவூரை அடுத்துள்ள தளவாய் கிராமத்தில் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் இருவரின் சடலங்கள் மின் கம்பங்களில் கட்டி வைக்கப்பட்டிருந்தன.

நேற்றுக்காலை காணப்பட்ட இருவரின் சடலங்கள் பற்றி எதுவித தகவலும் தெரிவிக்கப்படவில்லை. (மா)

## மின்சார உபகரணம் திருத்தும்பணி

கிளிநொச்சி, வியா.
கிளிநொச்சி பிரதேசத்தில் அண்மையில் இடம்பெற்ற அசம்பாவிதங்களால் சேதமடைந்த மின்சார உபகரணங்களை திருத்தும் வேலை யாழ். மாவட்ட கிளிநொச்சி உப அலுவலகத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பரந்தன் கிளிநொச்சி பகுதியின் பல இடங்களில் கடந்த இருமாதமாக மின்சாரம் தடைப்பட்டு இருளில் மூழ்கியதைத்தொடர்ந்து உப அலுவலக நிர்வாக அதிகாரி திரு. பாலசுப்பிரமணியம் சேதமடைந்த மின்சார உபகரணங்களை திருத்தம்செய்ய நடவடிக்கை எடுத்துள்ளனர். [சி]

## சட்ட விரோத ....

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ந்தே நேற்று மீண்டும் கவலை தெரிவித்து இவ்வறிக்கையை விடுத்துள்ளனர்.

மின்சார சட்ட ஒழுங்கு விதிகளுக்கு முரணாக மின்சாரத்தைப் பெறுவது பயன்படுத்துவது மின்சார உபகரணங்களை குறிப்பாக மின் மாற்றியை' பழுதடையச் செய்கிறது. இதனால் குறிப்பிட்ட அப்பிரதேசம் முழுவதுமே இருளில் மூழ்குகிறது இன்று மின்மாற்றிகள் பல வெடித்து பழுதடைந்து வருகின்றன. மேலும் ஒழுங்கற்ற முறையில் மின்னைப் பெறுவதால் உயிர்ச்சேதங்களும் ஏற்படுகின்றன.

''நெருக்கடி மிக்க இச் சூழ்நிலையில் எம் மக்களை நாம் பரிபூரணமாகப் புரிந்து கொள்ளும் அதேவேளை முழுப்பிரதேசமும் இருளில் மூழ்தம் ஆபத்தைத் தடுக்க உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம். எனவே எம்மக்கள் அனைவரும் மின்சார சபைகளுக்கு கட்டுப்பட்டு அவர்களின் சேவை தொடர பரிபூரணமாக ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம் மேலும் தமிழினத்திற்குரிய உணர்வோடு மின்சாரசபை ஊழியர்களும் எம்மக்களுக்குரிய தேவைகளை உணர்ந்து மின்சார ஒழுங்கு விதிகளுக்கமைய மின்சாரத்தை உடன் வழங்குமாறும் கேட்டுக்கொள்கிறோம்.'' என்று அவ்வறிக்கையில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (மா)

## இரு இராணுவ...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

டுகளான நிகால் கமகே[வயது 24 ,எஸ் சமரக்கோன் பண்டா (வயது 23) ஆகியோராவர்.

இவர்களது கொலைக்குப் பொறுப்பானவரெனக் கருதப்படும் பிறைவேட் எம். ஏ சி. பெர்னாண்டோ வயது 26] தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்துகொண்டார்.

இச்சம்பவத்தையடுத்து, இராணுவகமாண்டர் நளின் செனிவிரத்ன திருமலைக்கு விரைந்து தனது நேரடிக்கண்காணிப்பின் கீழ் விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார்.

திருமலை நீதவான் சுனில் ராஜபக்ஸ ஸ்தத்திற்கு விஜயம் செய்து மரண விசாரணையை மேற்கொண்டு மேல் விசாரணையை திங்கட்கிழமை வரை ஒத்திவைத்துள்ளார்.

# இலட்சியப்பற்றுல் மக்களை கவர்ந்த தர்மர்

இலங்கையில் மட்டுமல்ல அகில உலகமும் தன் சதிர்களை வீசிய உதயசூரியன் அமரர் வி தர்மலிங்கம் [முன்னுள் பாராளுமன்ற உறுப்பினர்] இன்று எம்மத்தியில் இருந்து பிரிந்து ஒரு வருடமாகின்றது.

1918 ம் ஆண்டு மாசிமாதம் 5-ம் திகதி இநபாலையில் பிறந்த 'தர்மர்' தனது தந்தையின் கிராமமான கந்தரோடைக்கு சிறுவயதிலேயே வந்துசேர்ந்து வளர்ந்துவந்தார் தனது ஆரம்பக் கல்வியைக் கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலையிலும் பின்பு கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி, யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி ஆகியவற்றிலும் கல்வி கற்றுர்.

இவரின் தந்தையும், தாயும் சிறுபராயத்திலேயே காலமாகியதால் இவரது தாயும தந்தையுமாக இருந்து இவரின் பெரியதந்தையாரான வைத்தியக் கலாநிதி சுப்பிரமணயம் [பி. எஸ்] வி ங்கி இவரை வளர்த்து நல்வழிப் படுத்தினுர்.

1945 ம் ஆண்டிலே சுன்னுகம் வேலும் மயிலும் விசாலாட்சி தம்பதிகளின் செல்வப் புதல்வி கமலாம்பிகையைத் திருமணம் செய்தார். இவர்களுக்கு சித்திரலேகா என்ற மகளும், சித்தார்த்தர் என்ற மகனும் பிறந்தனர் 'தர்மர்' திருமணம்செய்து மூன்று வருடங்களின் பின்பு கொழும்பு சட்டக் கல்லூரியில் சேர்ந்து சட்டம் பயின்றுர். அக்காலத்தில்தான் இன்றைய தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு அ அமிர்தலிங்கமும் சட்டக்கல்லூரியில் சேர்ந்தார். அன்றிலிருந்து இருவரும் இணைபிரியாத நண்பர்களாயினர். 'தர்மர்' சட்டக் கல்லூரியில் சேர்ந்து ஒருவருடத்தின் பின்பு ஒரு பேரிழப்புக்கு ஆளானுர். இவரின் அன்பு மனைவி கமலாம்பிகை மரணமானுர் அப்பொழுது அவரின் இரண்டு குழந்தைச் செல்வங்களின் எதிர்காலத்தை எண்ணித்தன் ஒருவருடச் சட்டப் படிப்புக்கு முழுக்குப்போட்டு தன் சொந்தக் கிராமமான கந்தரோடையில் தன் செல்வங்களுடன் வாழ்ந்துவந்தார்.

1945-ம் ஆண்டில் உடுவில் கிராமசபையின் கந்தரோடை வட்டாரப் பிரதிநிதியாகப் போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டார். இதுதான் இவரின் முதலாவது அரசியல் பிரவேசம். 1957-ம்ஆண்டில் மேற்படி கிராமசபையின் தலைவராகப் போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டார் இவர் தலைவராக இருந்த காலத்தில் இவரின் ஊழலற்ற நிர்வாகத்தையும், அபிவிருத்தியையும் பலரும் பாராட்டினர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

1960 ம் ஆண்டு பங்குனிப் பொதுத்தேர்தலில் முதன்முதலாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றிவாகை சூடினுர். அன்றிலிருந்து 1983-ம் ஆண்டு ஆருவது திருத்தத்துக்கு அரசுக்கு விசுவாசம் தெரிவித்து சத்தியப் பிரமாணம் எடுக்கமறுத்தது வரைக்கும் தொடர்ந்து இருபத்து மூன்று வருடங்கட்குமேல் உடுவில், மானிப்பாய் தொகுதிகளின் பிரதிநிதியாக இருந்து தன்னுலான பல சேவைகளைச் செய்தார்.

சோவியத் ரஷ்யாவின் பொருளாதாரத் திட்டங்களும், அங்குள்ள சிறுபான்மையினர் அனுபவித்துவரும் உரிமைகளும் இவரைப் பெரிதும் கவர்ந்தன இதன்காரணமாக இலங்கை - சோவியத் நட்புறவுச் சங்கத்தில் சேர்ந்து அதன் யாழ் கிளையின் தலைவராகப் பல ஆண்டுகள் சேவை புரிந்தார் அதுமட்டுமல்லாமல் இலங்கையின் தென்பகுதித் தலைவர்களின் நெருங்கிய நண்பனுக இருந்தது மட்டுமன்றி சிங்களக் கிராமங்களில் நடைபெற்ற பல கூட்டங்களில் தமிழரின் நியாயமான கோரிக்கைகளை எடுத்துரைத்தார் இதனுல் அவர் சிங்கள மக்களின் நன்மதிப்பைப் பெற்றுர்.

இவர் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் உலகின் பல்வேறு நாடுகளுக்குச் செல்லும் வாய்ப்புக் கிடைத்தது இதன்மூலம் அவருக்கு உலகின் பல பாகங்களிலும் நண்பர்கள் இருககிருர்கள் என்பது அவரின் மரணச் சடங்கின்போது கிடைத்த பல அனுதாபச் செய்திகள் சான்று பகர்கின்றன.

தன் சிரிப்பாலும், இலட்சியப் பற்றுலும், இன்சொல்லாலும் பல இலட்சம் மக்களைக் கவர்ந்த அமரர் 'தர்மர்' அவர்கள 1985 ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 2-ம் திகதி காலமானுர். அவரின் ஆன்மா சாந்தியடைய அவரின் ஓராண்டு பூர்த்தியில் பிரார்திப்போமாக.

ஆ. சி. கணேசவேல்

---

## நல்லூர்க் கந்தா எமைக்காப்பதுன்கடமை

வானகத் தமரரின் வெஞ்சிறையை வீட்டியெழில்
வார்குழல் பிடியை வேட்டு
ஏனற் புனங் காத்திருந்திடும் வள்ளியோடு
டெழில்நகை புரிந்தமர்ந்து
தேனுநற் றிணையுமுன் டருள்புரி குமரனே
செய்ய நல்லூர்ப் பதியினில்
தானமர்ந் தடியரைக் காத்திடுந் தயாபரா
சரவணபவா அருள்வையே

★ ★ ★ ★

எந்தமிழர் உயிருடல் உடைமை யாவும் அழித்
தினவெறி பிடித்து நிற்போர்
வந்தனைசெய் யாலயங்களையு மழித்தார்க்கின்ற
வெங்கொடுமை பொறுக்கலாற்ரு
தெந்தையே அகதியாய் ஏங்குகின் ருேமுன்றன்
இணையடி தஞ்சமென்று
சிந்தைக்கும் மெட்டாத சிற்பரா நல்லைவாழ்
சரவண பவா அருள்வையே

★ ★ ★ ★

வந்தவினை தீர்த்திடும் வேலுண்டு மயிலுண்டு
வளர்கருணை முகங்கள் உண்டு
செந்தமிழர் அகதியாய்த் தேம்புகின் ருேமுன்றன்
சிந்தைதான் உருகவிலையோ
சிந்துமருள் வேலேந்திச் சூர்கிளை தடிந்தமரார்
சிறைநீக்கி வைத்த முதல்வா
சந்ததம் எமைக்காப்ப துன்கடன் நல்லைநகர்ச்
சரவண பவா அருள்வையே

--- கி. நெல்லிநாதன்

## துயர்களைந்திடுவாய்

ஓங்காரத்தின் முழுப்பொருளோனே
ஆங்காரத்தை வேரறுத்த ஆறுமுகனே
நீங்காமலே எம்முள்ளத்தில் இன்பருடம்புரிய
தேங்காமலே தமிழர்நம் துயரைக்களைந்திடுவாய்.

--- வாசுகி குமாரசுவாமி

## "நாடிவந்தருள்வான் நல்லூரான்"

நல்லூரான் திருவடியை நாளுந்தொழுதிடுங்கள்
அல்லல் அறும்ஆனந்தம் — பெருகும்
சொல்லோணுத்துயரும் சோதனையும் விலகும்
எல்லாமவன் செயலென உணர்;

★ ★ ★ ★

நாடித்தொழுங்கள் நல்லூரான் திருவடியை
பாடிப்பணியுங்கள் பரமன்மகன் — புகழை
கோடிதனமும் குபேரப்பெரு வாழ்வும்
நாடிவந்தருள்வான் நல்லூரான்.

★ ★ ★ ★

கல்லுங்கள் கந்தன் பெரும்புகழை
செல்லுங்கள் நல்லூரான் — சந்நிதிக்கு
சொல்லுங்கள் அவன் புகழை நிறைய
வெல்லுங்கள் உங்கள் விசைப்பகையை.

--- சி. சபாநாதன், சங்கரத்தை.

---

## ஹற்றன் செய்திகள்

### இ. தொ. கா. வேலைவழங்க ஏற்பாடு

கொத்மலை தேர்தல் தொகுதியில் உள்ள வட்டக்கொடை அக்காமலை தோட்டத்தில் அண்மையில் டம்பெற்ற இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அடுத்த மாதம் தொடக்கம் வேலை வழங்க இ தொ. காவினுல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

இவர்கள் தற்போது தலவாக்கொல்லை ஸ்ரீகதிரேசன் கோவிலில் அகதிகளாகத் தங்கியுள்ளனர். [வா]

### பஸ்மோதி இளம்பெண் மரணம்

28 வயது நிரமபிய இளம் பெண் ஒருவர் இ. போ. ச பஸ்ஸினுல் மோதுண்டு ஸ்தலத்திலேயே துடிதுடித்துப் பலியானுர்.

இப்பரிதாப சம்பவம் மஸ்கேலியாவில் நிகழ்ந்துள்ளது. பஸ் சாரதி அ ம. பிரேமதாசாவை மஸ்கேலியா பொலிசார் கைது செய்து விளக்க மறியலில் வைத்துள்னர். [வா]

---

## இலங்கை விவகாரம்:

# உடனுக்குடன்எம்.ஜி.ஆருக்கு அறிவிக்க ராஜீவ் பணிப்பு!

புதுடில்லி ஆகஸ்ட் 27

இலங்கை இனப்பிரச்சினைக் தீர்வுகாணும்முகமாகஇந்தியா எடுத்துவரும் முயற்சிகள்பற்றி தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி ராமச்சந்திரனுக்கு உடனுககுடன் அறிவிக்குமாறு இந்திய வெளியுறவு அமைச்சு அதிகாரிகளை இந்திய பிரதமர் திரு ராஜீவ் காந்தி பணித்துள்துள்ளார் என புதுடில்லி வட்டாரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

கடந்த வாரம் தமிழ்நாடு முதலமைச்சரை மத்திய அமைச்சர்கள் திரு பூட்டா சிங், திரு சிவ்சங்கர், திரு. பி. சிதம்பரம், சந்தித்ததொடர்பான விடயங்கள் பற்றி இந்தியப் பிரதமருக்கு ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருந்தது

இதனைத்தொடர்ந்தே திரு. ராஜீவ் காந்தி இந்தபணிப்பினை வெளியுறவு அமைச்சக அதிகாரிகளுக்கு விடுத்துள்ளதாக இந்திய ராஜதந்திரிகள் வட்டாரம் தெரிவித்துள்ளது. (க)

---

## கையொப்பமிட

# முகாமிற்கு சென்றவர் வீடு திரும்பவில்லை

வயனிவா, வியாழன்

வவனியா தச்சன்குளம் ராணுவமுகாம் தலைமை அலுவலகத்திற்கு நேற்றுகையொப்பமிடுவதற்குச் சென்ற நடராசா அருள்நேசன் என்பவர் இதுவரை வீடுவந்து சேரவில்லை என குடும்பத்தின தெரிவித்துள்ளனர்.

கடந்த மதம் ராணுவத்தால் கைதுசெய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்ட இவரை இருவாரங்களுக்கு ஒரு முறை வவனியா ரணுவ தலைமை அலுவலகத்தில் வந்து கையெப்பமிடுமாறு பணிக்கப்பட்டிருந்தார்.

இதனை தொடர்ந்து அருள் நேசன் இரண்டுமுறை முகாம் சென்று கையொப்பமிட்டிருந்தார் மூன்ரும் முறையாக நேற்று கையொப்பமிடச் சென்ற இவர் மாலைவரையும் வீடு திரும்பாததை தொடர்ந்து குடும்பத்தினர் மத்தியில் பெரும் பதற்றம் தோன்றியுள்ளது (சி)

## காணி உறுதி வழங்க நடவடிக்கை

பச்சிலைப்பள்ளி, வியாழன்

பச்சிலைப்பள்ளிப் பகுதியில் அரசாங்க குடியேற்றக் காணிகளில் வசித்துவருபவர்களுக்கு அவர்களுக்குச் சொந்மான உறுதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## இன்று

யாழ்ப்பாணம், வெள்ளி

தென்மராட்சியில் கலைத்துறையில் சாதனைகள் படைத்துவரும் சாவகச்சேரி பெரிய மாவடி சித்திவிநாயகர் கலா மன்றத்தின் புதிய கலையரங்க திறப்புவிழா இன்றுவெள்ளிக்கிழமை திரு. கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறவிருக்கிறது, (கிளி)

## யாருடையது?

இங்கிலாந்தைச் சேர்ந்த "ரிம்செலி" என்பவருக்குரிய திறப்புக்கோர்வையை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவன் செல்வன் ஜெகதீஸ்வரன் மல்லாகத்தில் கண்டெடுத்து ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் தகுந்த அத்தாட்சி காட்டி அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளவும்.


## நாடக அரங்கப் பயிற்சிக் கல்லூரி

மக்கள் கலைஅரங்கத்தினுல் இணுவில் நியூ காலிங்கன் திரை அரங்கில் 6-9 86 சனிக்கிழமை ஆரம்பித்து நடாத்தப்படவுள்ள நாடக அரங்கப் பயிற்சி நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப் பத்திரங்களை மேற்படி திரைஅரங்கில் அமைந்துள்ள அலுவலகத்தில் 31 8-86 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிதொடக்கம் 4 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். [C-4297]



## கண்ணீர் அஞ்சலி

வரையறுக்கப்பட்ட ஹட்டன் நஷனல்
வங்கி யாழ்ப்பாணக்கிளை முகாமையாளர்
அமரர் சூரியகுமாரன்
அவர்களுக்கும்
அன்பிற்கும் பண்பிற்கும் உறைவிடமாய்
வாழ்ந்து இறைவனடி சேர்ந்த
செல்வி சத்தியபாமா
அவர்களுக்கும்
எமது கண்ணீர் அஞ்சலி
யப்பான் ஜுவலர்ஸ்
64, கன்னதிட்டி,
யாழ்ப்பாணம். (C 4314)

## பதவி உயர்வு

மன்னார், வியாழன்

முருங்கன் மகாவித்தியாலய அதிபராக கடமை புரிந்த திரு. எஸ். வேதநாயகம் கடந்த முதலாம் திகதியிலிருந்து மன்னார் வட்டாரக்கல்வியதிகாரியாக பதவி உயர்வு பெற்றுள்ளார். இதற்கான நியமனக்கடிதம் மன்னார் பிரதேசக்கல்விப் பணிப்பாளரால் அனுப்பப்பட்டுள்ளது. இதே வேளையில் வங்காலை மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த ஆசிரியர் திரு பர்ணபாஸ் எமில் குலாஸ் முருங்கன் மகா வித்தியாலய அதிபராகவும் பதவி உயர்வு பெற்றுள்ளார்.

## அடையாள அட்டை

மன்னார், வியாழன்

மன்னார் மாவட்டத்திலுள்ள ஆசிரியர்களுக்கு புதிய அடையாள அட்டைகள் வழங்குவதற்கு மன்னார் கல்வித் திணைக்களம் நடவடிக்கைகள் எடுத்துவருகிறது.

## மின்கம்ப தண்டனை

வவனியா, வியாழன்

முருங்கன் தபாற் கந்தோருக்கு அருகில் மின்கம்பம் ஒன்றில் ஆணின் சடலம் ஒன்று துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் இன்று கட்டப்பட்டிருந்தது.

நடுத்தர வயதுடைய இவர் சாரமும் சேட்டும் அணிந்துள்ளார். இதுவரையும் சடலம் அடையாளம் காணப்படவில்லை என அறிவிக்கப்படுகிறது. (சி)

## இளைஞர் கோஷ்டியால் கைது

வவனியா, வியாழன்

மன்னாரிலிருந்து வவனியா நோக்கிவந்த இ.போ.ச. பஸ் ஒன்றினை இன்று குருக்களூரில் தடுத்து நிறுத்திய இளைஞர் கோஷ்டி ஒன்று அதில் பிரயாணம் செய்த ஒருவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்ததாக தெரியவருகிறது.

இச்சம்பவம் பற்றி கூறப்படுவதாவது:- மன்னாரிலிருந்து வவனியா நோக்கி பஸ் வந்த போது குருக்களூரில் இளைஞர் கோஷ்டி ஒன்று மறித்து பஸ்ஸினுள் சோதனை செய்த போது சிங்கள அடையாள அட்டையுடன் தமிழ் சரியாகத் தெரியாத ஒருவரை மட்டும் தடுத்து நிறுத்தியதுடன் மற்ற அனைவரையும் தொடர்ந்து செல்ல அனுமதித்தனராம். (சி)

## இயந்திரங்கள் திருட்டு

நெல்லியடி, வியாழன்

நெல்லியடிப் பட்டினப் பகுதியில் கடந்த சில நாட்களில் இரண்டு நீரிறைக்கும் மோட்டார்கள் திருடப்பட்டுள்ளது இதையடுத்து நெல்லியடி பட்டின சபைப் பாதுகாப்புச் சபைத் தொண்டர்கள் இனிமேல் பகிரங்க வீதிகளை விட உள்ளூர் ஒழுங்கைகளிலும் தமது ரோந்து நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தத் தீர்மானித்துள்ளனர். (இ)

## நோயாளர் உண்ணாவிரதம்

மட்டக்களப்பு, வியாழன்

மட்டக்களப்பு மாந்தீவு குஷ்டநோய் ஆஸ்பத்திரியில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் சுமார் 100 நோயாளர்கள் நேற்று ஒருநாள் உண்ணாவிரதம் அனுஷ்டித்தனர்.

மாதந் தோறும் இந்த நோயாளர்கள் தங்கள் வீடுகளுக்குச் செல்வதற்கு 2நாள் லீவு கொடுப்பது வழக்கம் நாட்டு நிலமையைக் கருதி கடந்த ஜனவரி தொடக்கம் இந்த 2நாள் லீவு ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

இதனை ஆட்சேபித்தே நேற்று நோயாளர்கள் உண்ணாவிரதம் இருந்தனர். மீண்டும் இந்த லீவு வழங்கப்படும் என்று நிர்வாகம் உறுதியளித்ததைத் தொடர்ந்து உண்ணாவிரதம் கைவிடப்பட்டது. (மா)

## பிரிவுபசாரம்

பருத்தித்துறை, வியாழன்

அம்பன் விவசாயபோதனாசிரியராகவிருந்து விவசாயத் திணைக்களத்தால் பதவி உயர்த்தப்பட்டு யாழ் தலைமைக் காரியாலயத்திற்கு இடமாற்றம் பெற்ற திருமதி தனவதி கந்தசாமி. அலுவலக மேற்பார்வையாளராகவிருந்து நல்லூர் விவசாயப் போதனாசிரியர் அலுவலகத்துக்கு இடமாற்றம் பெற்ற செல்வி விஜயா பொன்னுத்துரை ஆகியோருக்குப் பிரிவுபசார விழா அம்பன் சமநல சேவை நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

## கிளைச்சங்க நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ். ப. நோ. கூ. சங்க கிளை இல 7க்கான தேர்தலின் போது பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவானார்கள்.

தலைவர்- திரு. பொ. ஸ்ரீஸ்கந்தராஜா, உபதலைவர்- திரு வி. எஸ். இராமநாதன், செயலாளர்- திரு. வே கிருஸ்ணனந்தன், பொதுச்சபைப் பிரதிநிதிகள்- திரு, வி. எஸ். இராமநாதர், திரு. கா. ரூபமூர்த்தி. திரு. மு. ஜெகதீசன், நிர்வாக உறுப்பினர்கள்- திரு யோ. சத்தியநாதன் திரு. சி, பாபநாசம்சிவம், திரு மா, சுரேந்திரன், திரு. ச, குலேந்திரன்.

## சாராயம் விற்றவருக்கு அபராதம்

அராவி, வியாழன்

இளைஞர் குழுவொன்று நேற்று முன்தினம் அராலி வடக்கிலுள்ள சாராயம் விற்பவர்கள் வீடுகளில் திடீரென முற்றுகையிட்டது ஒருவரது வீட்டில் சாராயத்தைக் கைப்பற்றியது.

மேற்படி சாராயம் விற்பனை செய்த நபரை பலமுறை இளைஞர்கள் விற்கவேண்டாம் என்று சொல்லியும் மீறி விற்பனை செய்தமையால் இந் நபரிடம் குறிப்பிட்ட பணம் குற்றமாக அறவிடப்பட்டது. அத்துடன் சாராயம் குடித்தவர்களும் எச்சரிக்கை செய்யப்பட்டனர்.


"நாட்டிய நிகழ்ச்சிகள் நடத்தும்போது உடல்வலி ஏற்பட்டால் உடனடி நிவாரணம் தருகிறது பனடோல்"

செல்வி வாசுகி சண்முகம்பிள்ளை.
பரதநாட்டியத்தாரகை.



வலிக்கும் காய்ச்சலுக்கும் எதிரான, ஒவ்வொருவரும் நம்பக்கூடிய நிவாரணி.

பனடோல் வலிக்கும் காய்ச்சலுக்கும் எதிரான நிவாரணி, அது நங்கையர் நலக்குறைவுக்கும், உடல்வலி வேதனைகளுக்கும் நிவாரணம் தருகிறது பனடோல் அதிமென்மையான வயிற்றைக் கூடப் பாதிக்காத துரித நிவாரணி என்பதால்தான் உலகெங்குமுள்ள டாக்டர்கள் பனடொலைச் சிபாரிசு செய்கிறார்கள்.




விலை - வில்லையொன்று 50 சதம்

# பனடோல்

பரசிற்றமோல் வர்க்கத்தைச் சார்ந்தது.

தயாரித்து விநியோகிப்போர்.
மக்வூட்ஸ்-விந்த்ரெப் லிமிட்டெட்

துரிதநிவாரணி... அது வயிற்றைக் கூடப்பாதிப்பதில்லை.

JWT MW 1762

(A 1083)

லஞ்ச, ஊழல் குற்றச்சாட்டு:

# உஸ்பெஸ்கிஸ்தான் முன்னுள் அமைச்சருக்கு மரணதண்டனே!

மாஸ்கோ, ஆகஸ்ட் 28

**சோவியத் யூனியனின் உஸ்பெஸ்கிஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்த முன்னுள் அமைச்சரொருவருக்கு மரணதண்டனே வழங்கப்பட்டுள்ளது. இந்த அமைச்சர் லஞ்ச ஊழல் மோசடிகளில் ஈடுபட்டதையடுத்தே இத்தண்டனேக்குள்ளாஞர்.**

வி. உஸ்மாஞேவ் (வயது 51) என்ற இவ் அமைச்சர் சோவியத்தின் மத்தியமானிலமான உஸ்பெஸ்கிஸ்தானில் 10 வருட காலம் 1984ம் ஆண்டுவரை அமைச்சர் பதவியிலிருந்தார்.

இவர் பருத்திக் கைத்தொழில் துறை சார்ந்த அமைச்சுக்கே பொறுப்பாகவிருந்தார். பணமாகவும் சொத்துக்களாகவும் இவர் பெருமளவு லஞ்ச ஊழல் மோசடிகளில் இறங்கியிருந்தார் என தெரிவிக்கப்பட்டது.

இக்குற்றச் சாட்டையடுத்து 84ம் ஆண்டு அமைச்சர் பதவியிலிருந்தும் சோவியத் யூனியனின் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்தும் உஸ்மாஞேவ் பதவி நீக்கம் செய்யப்பட்டார். தொடர்ந்து கடந்த இருவருடங்களாக சோவியத் உயர் நீதி மன்றில் இவர் விசாரணைக்குட்படுத்தப்பட்டார்.

அமைச்சர் உஸ்வாஞேவுக்கு இவ் விசாரணைகளின் இறுதியில் மரணதண்டனே விதிக்கப்பட்டுள்ளது. இவருடன் இவரது அமைச்சைச் சேர்ந்த பல சிரேஷ்ட அதிகாரிகளும் லஞ்சக் குற்றச் சாட்டுக்கள் தொடர்பாக தண்டிக்கப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது

1985ம் ஆண்டு சோவியத் ஆட்சிப்பீடத்தின் அதிபராக திரு. மிக்கேல் கோபச்சேவ் பதவியேற்றபின்னர் சோவியத் மாநிலங்களில்லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்கள் பெருகி இருப்பதை சுட்டிக் காட்டியதுடன் இவை தொடர்பாக கடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று எச்சரித்தார்.

இதைத் தொடர்ந்தே தற்போது லஞ்ச ஊழல்கள் தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதேவேளே சுமார் 9ஆயிரம் பொலிசாரும் சட்டத்துறை ஊழியர்களும் லஞ்ச ஒழிப்பு நடவடிக்கைகள் தொடர்பாக சோவியத்தின் சேவைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடப் தக்கது.

## உலகச் செய்திகள்

ஹராரே அணிசேரா மகாநாடு:

## 50க்கு மேற்பட்ட தலேவர்கள் கலந்துகொள்கின்றனர்!

ஹராரே, ஆக 28

ஸிம்பாப்வேயில் இடம் பெறவிருக்கும் 8வது அணிசேரா உச்சி மாநாட்டில் 50க்கும் மேற்பட்ட தேசத்தவர்கள் மற்றும் அரசியல் பிரமுகர்கள் கலந்துகொள்வார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் திங்கட்கிழமை இம் மாநாடு ஆரம்பமாகின்றது. இந்தியப் பிரதமர் திரு ராஜிவ்காந்தி அணிசேரா இயக்க தலேமைப் பொறுப்பை ஸிம்பாப்பே பிரதமர் திரு ரொபேட் முகாபேயிடம் கையளிப்பார்.

பெரும்பாலான அணிசேராத்தலேவர்கள் ஹராரே வரவிருக்கின்ற போதிலும் இலங்கை பாகிஸ்தான் பங்களாதேஷ் சிங்கப்பூர் இந்தோனேஷியா ஆகிய நாடுகளின் தலேவர்கள் அங்கு செல்வது பற்றி இறுதி வரை இறுதி முடிவெதுவும் எடுக்கவில்லே என்று தெரிவிக்கப்பட்டது.

இவ்வேளே அணிசேரா இயக்க வெளிநாட்டமைச்சர்களின் மகாநாடு நேற்று ஆரம்பமானது. இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு சிவ்சங்கர் இம்மகாநாட்டை ஆரம்பித்து வைத்தார்.

### யாருடையது?

சுன்னுகம் மக்கள் வங்கியால் திரு. கே வரதராஜா என்பவருக்கு வழங்கப்பட்ட காசோலேயொன்றினே திரு. எம். கந்தவனம் என்பவர் கண்டெடுத்து ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார் உரியவர் அலுவலக நேரத்தில் தகுந்த அத்தாட்சி காட்டி நேரில் பெற்றுக் கொளளவும்.

## இன்றைய பலன்

மாதம்- ஆவணி
திகதி- 13 1986- 8- 29)
கிழமை- வெள்ளி
திதி- நவமி காலே 6-31ன் மேல் தசமி
நக்ஷத்திரம்- மிருகசீரிடம் முழு இரவு வரை.

மேடம்: புதிய முதலீட்டை இன்று ஒத்திவைக்கவும், நண்பர் ஒருவரின் செய்தி கவலேக்கிடமளிக்கும். தனிவழிப் பயணத்தைத் தவிர்த்துக் கொள்ளவும்

இடபம்: முன்னேற்றம் தடைப்படும். குடும்பத்திலும் பிரச்னேகள் தோன்றி மறையும், நம்பிக்கை மோசடியும் நடக்கலாம்.

மிதுனம்: இதமான வாழ்வு இன்சொல் இவற்றுடன் பெரியோர் ஆதரவும் உண்டு, கல்விநலனுமுண்டு.

கடகம்: தானிய நஷ்டத்திற்கு இடமுண்டு, தவறுகள் நடக்கலாம், நிலேயும் தடுமாறும், எதிலும் நிதானபுத்தியுடன் இருக்கவும்

சிங்கம்: வாழ்வு மலரும், தொழிலும் சிறக்கும், தாய் வழிப் பெருமையும் உண்டு, நன்னுள்

கன்னி: வாழ்வுப் பாதையில் முன்னேற்றம் தென்படும், காதலர்களும் மகிழ்ச்சியடைவர், புதிய எண்ணங்களும் கைகூடும்,

துலாம்: வாழ்க்கையில் கொந்தளிப்பு நிலே தென்படும். எதையும் அலட்சியம் செய்வீர்கள், தொழிலும் கெடும்.

விருச்சிகம்: பணவிடயத்தில் திருப்திகாணும், தெய்வ நம்பிக்கை மேலிடும். நீண்ட நாள் கடன் இன்று தீரும்

தனுசு: அற்பவிடயத்திற்குக் கூட பொல்லாங்குகேட்க நேரிடும். உறவுமுறைகளில் முறிவு ஏற்படும், பணத்துடன பழகுபவர்கள் அவதானம் வேண்டும்

மகரம்: எழுத்தாளர்களுக்கு எழுச்சிமிக்க தினம் முதியவர் ஒருவரின் அறிவுரை புதிய பாதைக்கு வழிகாட்டும் குருவின் ஆசியுடன் குறிக்கோளே நிறைவேற்றுவீர்கள்,

கும்பம்: புதுமனே கட்டுவதற்கும் சிலர் அத்திவாரமிடலாம், அடக்கமான நடவடிக்கை மூலம் மற்றவர்களின் மனத்தைக் கவருவீர்கள், இரு தொழில் புரியும் வாய்ப்புமுண்டு.

மீனம்: லாபகாமானதொழிலில் ஈடுபடுவீர்கள், வெளியிடத் தொடர்பு பயன்தரும், சகோதரவழி மகிழ்ச்சிக்குமிடமுண்டு.

திருமலே
வே. ரவீந்திரன்


## பிரயாண ஒழுங்குகள்

★ கனடா ★ பிரான்ஸ்
★ ஜேர்மனி ★ டென்மார்க்

ஆகிய நாடுகளிற்கு எமது பிரதிநிதி
2-ம் திகதி கொழும்பிலிருந்து நேரடியாக
அழைத்துச் செல்லவுள்ளார்.

உடன் கடவுச்சீட்டுடன் தொடர்புகொள்ளவும்.

மற்றும்

பாஸ்போர்ட், விசா, ரிக்கற், பொன்டிங்
என்பனவும் குறைந்த செலவில்
உடனுக்குடன் செய்துகொடுக்கப்படும்.

**லிப்ருஸ் லிமிட்ரெட்**

R. G. பில்டிங்,
70,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

[A-1081]



## பிரயாண ஒழுங்குகள்

★ கனடா
★ டென்மார்க்
★ ஜேர்மனி
★ சவூதி அரேபியா

★ கனடா,டென்மார்க்,ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கு எமதுமுகவர் உங்களே எதுவிதஇடையூறுகளுமின்றி நேரடியாக அழைத்துச் செல்வார்.

★ சவூதிஅரேபியாவுக்குமேசன், தச்சு, வீதித்திருத்தம், விவசாயம், தொழிலாளர் போன்ற பதவிகளுக்கு உடன் அனுப்பி வைக்கப்படும். செல்ல விரும்புவோர் 6 படம், பாஸ்போட் என்பவற்றுடன் உடன் தொடர்பு கொள்ளவும். பாஸ்போட், பொண்ட் ஆகியனவும் செய்துதரப்படும்.

★ தீவுப்பகுதி மக்களின் நலன் கருதி எமது கிளே ஸ்தாபனம் ஓமேகா ரவல்ஸ் அன்ட் டூர்ஸ் என்னும் பெயரில் வேலணே வங்களாவடி சந்தியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்ருேம்;

தொடர்பு:
**N. BALA,**

பஸ்வழி இலக்கம்: 764, பலாலி வீதி, கோண்டாவில்.
திருச்செல்வம் விதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

**ஓமேகா ரவல்ஸ் அன்ட் டூர்ஸ்**
வங்களாவடிச் சந்தி, வேலணே.

(A 1074)



## சமுத்திரா மல்ரி சேவிசஸ்

கண்டி வீதி, (இலங்கை வங்கிக்கு அருகாமை),
சாவகச்சேரி.

எமது பிரதிநிதிகள் மூலமும், கிளே நிறுவனங்கள் மூலமும் சேகரிக்கப்பட்ட பல புதிய எஞ்சினியர், எக்கவுண்டன், டாக்டர் பட்டதாரிகள், அரச தனியார் ஊழியர் போன்ற எல்லாத் தரத்திலும் ஆண், பெண் இருபாலாரிலும் மணமக்கள் இருக்கிருர்கள் உங்கள் தெரிவுகளுக்கு இன்றே விஜயம் செய்யுங்கள்.

இதர சேவைகள்:-
★ காணி வீடுகள் வாங்குதல், விற்பனே செய்தல்
★ கட்டிட நிர்மாண ஒப்பந்தங்கள்
★ கட்டிட படவரைதல்
★ கட்டிடங்களேத் திருத்துதல் பழுதுபார்த்தல்
★ மின்சார உபகரணங்கள் பொருத்துதல்
★ ஏல விற்பனேகள்
★ கடவுச்சீட்டு எடுத்தல், புதுப்பித்தல், பிணேநிற்றல், விசா, ரிக்கட்டிங்
★ தட்டச்சுச் சேவை ★ சட்ட ஆலோசனேகள்
★ மொழிபெயர்ப்புச் சேவை ★ இதரசேவைகள்

தலேமைச் செயலகம்:

**சமுத்திரா மல்ரி சேவிசஸ்**
303, பலாலி ரேட், கோண்டாவில்.

கிளே நிறுவனங்கள்:
★ முருகமூர்த்தி லேன் நெல்லியடி, கரவெட்டி
★ கண்டி வீதி, சாவகச்சேரி.
★ K K. S ரேட், தெல்லிப்பளே.
★ கரைநகர் வீதி, மானிப்பாய்.
★ ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
★ வங்களாவடி, வேலணே

உங்கள் தேவை ! எங்கள் சேவை !

(A 1082)

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

வெள்ளிக்கிழமை 29 8-86

# உடுத்துறையில் கரையிறங்க முயற்சித்த படையினருடன் புலிகள் சமர்

வல்வெட்டித்துறை, வியா.

உடுத்துறையில் கடற்படையினருடன் தமிழீழ விடுதலைப் புலிகள் நேரடி மோதலில் ஈடுபட்டனர்.

கடந்த இரவு சுமார் 7 மணியளவில் கடற்படை பாரிய பீரங்கிக் கப்பலிருந்து சிறிய ரோந்து விசைப் படகில் பல இராணுவத்தினர் இறக்கி விடப்பட்டனர்.

இறக்கிவிடப்பட்ட இராணுவத்தினர் கரையை நோககி வந்தனர். இதனை அவதானித்த கரையோரக் காவலில் ஈடுபட்டிருந்த தமிழீழ விடுதலைப் புலிகள் கரையிலிருந்து சுமார் 100 யார் தொலைவில் அண்மித்த விசைப் படகினை நோக்கித் தாக்குதலை மேற்கொண்டனர் எதிர்பாராத விதத்தில் ஏற்பட்ட தாக்குதலால் நிலைகுலைந்த படையினர் படகிலிருந்து கடுமையான தாக்குதலை மேற்கொண்ட போது, விடுதலைப் புலிகள் மேலும் தாக்குதலைப் பலப்படுத்தும் வகையில் 'லோறப்போ எம். ஜி 37 போன்ற நவீன ரக ஆயுதங்கள் கொண்டு நேரடி சமர் புரிந்தனர்.

இத் தாக்குதலால் படையினரின் கரையிறங்கும் முயற்சி தோல்வியடைந்தது.

## 'இந்து' செய்தி

புதுடில்லி, ஆக் 28

இம்மாதம் 19ம் திகதி புதுடில்லியில் ஈழ தேசிய விடுதலை முன்னணியின் குழுக்களினதும் 'புளொட்'டினதும் தலைவர்கள் நடத்திய சந்திப்பின் போது இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வுகாணுதல் தொடர்பான பேச்சுவார்த்தைகள் பற்றி ஒருமித்த முடிவை எடுப்பதென தீர்மானிப்பதாக 'இந்து' தெரிவித்துள்ளது. (சூ-ஊ)

## மரணம் அதிகரிப்பு

கொழும்பு, வியாழன்

இலங்கையில் தற்போது 15 ஆயிரம் முதல் 20 ஆயிரம் பேர்வரை ஹீரோயின்போதை பொருளுக்கு அடிமையாகி உள்ளனர்.

ஹீரோயினை அளவுக்குமிஞ்சி பாவிப்பதால் நாட்டில் தற்போது இறப்பவர்களின் தொகை அதிகரித்துள்ளது. (சி

## ஈ. தே. வி. மு. கருத்து

சென்னை, ஆகஸ்ட் 28,

சகல போராளிகள் இயக்கங்களினதும் ஒருமித்த அணுகுமுறையை ஏற்படுத்திய பின்புதான், இலங்கை அரசுடன் நேரடிப்பேச்சு வார்த்தைகளைத் தாம் மேற்கொள்ள முடியுமென ஈழதேசிய விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

சகல தீவிரவாத இயக்கங்களின் சார்பிலும் ஒருமித்த அணுகுமுறை தொடர்பாக இறுதி முடிவொன்று விரைவில் எடுக்கப்படுமெனவும் அது மேலும் தெரிவித்துள்ளது.

## மன்னருக்கு மீண்டும் பஸ் சேவை

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணத்திலிருந்து மன்னருக்கு அடுத்த மாதம் தொடக்கம் மீண்டும் பஸ் சேவை நடத்த வ.பி போ.வ. சபை தீர்மானித்துள்ளது. [மா]

## யாழ். மத்தியகல்லூரி மீது நேற்றும் 'ஷெல்' தாக்குதல்

யாழ்ப்பாணம், வெள்

யாழ் மத்திய கல்லூரியில் நேற்றும் 'ஷெல்' வந்துவீழ்ந்து வெடித்ததினுல் கல்லூரியில் சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

யாழ் மத்திய கல்லூரி அதிபரும், யாழ் வேம்படி மகளிர் கல்லூரி அதிபரும் இன்று யாழ் கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கத்தை சந்திப்பார்கள்.

அண்மையில்இவ்விரு கல்லூரிகளிலும் யாழ். கோட்டையி மேற்கொள்ளப்படும் ஷெல்கள் பெருஞ் சேதங்களை ஏற்படுத்திவருவது சம்பந்தமாக பாடசாலையைப் பாதுகாப்பது தொடர்பாகவும் ஆலோசனை நடாத்தவே மேற்படி இரு கல்லூரிகளில் அதிபர்களும் கல்விப்பணிப்பாளரைச் சந்திக்கவுள்ளனர். [ச-எ]

## போக்குவரத்து தாமதம்

(வவனியா நிருபர்)

கிளிநொச்சியிருந்து மாங்குளம் நோக்கி இராணுவத்தினர் நடைபவனியாக ரோந்து சென்றமையால் நேற்று யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்ட வ. பி. போ. பஸ் வண்டி. தனியார் பஸ்கள் யாவும் நேற்று கால தாமதமாக இரவு 8-30 மணியளவில் வவனியா வந்தடைந்தன. (ஒ)

## தடுப்புகாவலிலுள்ள சுங்க அதிகாரிகளை விடுதலைசெய்யுமாறு 'அமிர்' ஜனதிபதியிடம் கோரிக்கை

கொழும்பு, வியாழன்

எயர் லங்கா குண்டு வெடிப்புச்சம்பந்தமாகக் கைது செய்யப்பட்டுத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள சுங்கத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கெதிராக இதுவரை வழக்குத் தாக்கல் செய்யப்படாத பட்சத்தில் அவர்களை விடுதலை செய்யவேண்டுமென தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர் திரு அமிர்தலிங்கம் ஜனுதிபதி ஜயவர்த்தனவிடம் கோரியுள்ளார்.

மேலும் இவ்வுத்தியோகத்தர்களை அவர்களது குடும்பத்தினர் சென்று பார்ப்பதற் எதுவித சந்தர்ப்பமும் அளிக்கப்படவில்லையெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார் அத்துடன் ஒரு வருடத்துக் மேலா கைது செய்யப்பட்டு எதுவித விசாரணையுமின்றித் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இளைஞர்களையும் உடனடியாக விடுதலை செய்யுமாறு திரு. அமிர்தலிங்கம் ஜனுதிபதியைக் கோரியுள்ளார்.

இதற்குப் பதிலளித்த ஜனுதிபதி சுங்கத் திணைக்கள உத்தியோகத்தர்கள் தொடர்பான விசாரணை முடிவுற்றதும் துரித கதியில் வழக்குத் தாக்கல் செய்யப்படுமெனவும் அவர்களது உறவினர்கள் அவர்களைச் சென்று பார்ப்பதற்கு வசதியளிக்கப்படுமெனவும் கூறியுள்ளார்.

## ஆசிரியர்களுக்குக்கஷ்டபிரதேச விசேஷ அலவன்ஸ்

பச்சிலைப்பள்ளி, வியாழன்

பருத்தித்துறை கிழக்கில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு கஷ்டப்பிரதேச விசேஷ 'அலவன்ஸ்' வழங்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து வசதிகள் முற்றுக இல்லாத வெற்றிலைக்கேணி தொடக்கம் போக்கறுப்ப வரையுள்ள பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு அவர்களது சம்பளத்தில் 15 வீதமும் மணல்காடு தொடக்கம் ஆழியவளை வரையுள்ள பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு சம்பளத்தில் 10 வீதமும் விசேஷ அலவன்ஸாக வழங்கப்படுகிறது.

## 'ஷெல்' தாக்கி இரு வீடுகள் சேதம்

வல்வெட்டித்துறை, வியா.

நள்ளிரவு தொண்டமனுறு இராணுவ முகாமிலிருந்து சுமார் ஐந்து மோட்டார் ஷெல்கள் ஏவப்பட்டன துப்பாக்கி வேட்டுக்களும் தீர்க்கப்பட்டன

ஷெல்கள் விழுந்து வெடித்ததில் இரு வீடுகள் சேதமடைந்துள்ளன எதுவித தாக்குதல்களும் நடைபெருமலேயே முகாமிலிருந்து இத் தாக்குதல் நடைபெற்றது. (எ)

## அனுமதிப்பத்திரம் பெற்ருல் மட்டும் நிவாரண உதவி

பச்சிலைப்பள்ளி, வியா.

வடபகுதி கடற்ருெழிலாளர்கள் மீன்பிடிக்கலங்களுக்குரிய அனுமதிப்பத்திரத்தினை பெற்றுக்கொள்ளாவிடில் அவர்களுக்கு வழங்கப்படும் நிவாரண உதவிகள் வழங்கப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது

கடல் வலயச் சட்டத்தினுல் பாதிக்கப்பட்ட கடற்ருெழிலாளர்களுக்கு வழங்கப்படும் அரசாங்க நிவாரணங்கள் இனிமேல் மீன் பிடிக்கலங்களுக்கு மட்டுமதான் அனுமதிப் பத்திரத்தை வைத்திருப்பவர்களுக்கு வழங்கப்படுமென கடற்ருெழில் பரிசோதகர்களால் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

## ஆஸ்பத்திரியில் இருவர் அனுமதி

யாழ்ப்பாணம, வெள்ளி

யாழ். கோட்டையிலிருந்து நேற்றுக்காலை மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலால் இருவர் காயமுற்று யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் ஷெல் தாக்குதலால் ரூபன் (10 வயது), முகுந்தன் (25 வயது) ஆகிய இருவரும் காயமுற்று யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுபவர்களாகும்.

ஷெல் தாக்குதலைத் தொடர்ந்து யாழ். நகரத்தின் பஸ் நிலையம், ஆஸ்பத்திரி வீதியில் நின்ற பொது மக்கள் சிதறி ஓடினுர்கள். வாகனங்களும் வேகமாக ஓடின. சிறிதுநேரம் நகரம் அல்லோலகல்லோலப் பட்டது. (ச)

## பருத்தித்துறையில் கடற்படையினர் ஷெல் தாக்குதல்

வல்வெட்டித்துறை, வியாழ

பருத்தித்துறை இராணுவ முகாமுக்கு படையிலரை இறக்க முயன்ற கடற்படையினர் மீதும் புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர்

இன்று காலை பருத்தித்துறை முகாமுக்கு நேராக வந்து தரித்த பீரங்கி கப்பலிலிருந்து சிறிய பிளாஸ்ரிக் படகின் மூலம் பல படையினர் இறக்கப்பட்டு முகாமுக்கு கொண்டுவரப்பட்டனர்.

கரையை சமீபித்ததும் முகாமின் கிழகுப் புறத்திலிருந்து விடுதலைப்புலிகள் படகின் மீது தாக்குதலை நடத்தினர் இத்தாக்குதலால் படகு கரைக்கு வராமல் உயர நோக்கிச் சென்றது. இதனைத்தொடர்ந்து முகாமிலிருந்தும் கடற்படைக் கப்பலிலிருந்தும் ஷெல்கள் அடிக்கப்பட்டன. அதே வேளை முகாமிலிருந்தும் சரமாரியாக துப்பாக்கி வேட்டுக்களும் தீர்க்கப்பட்டன.

இதன் பின்னர் முகாமிலிருந்து தொடர்ச்சியான ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. புலிகளின் கிழக்கு பக்கமிருந்த பாதுகாப்பு அரண் பீரங்கியினுல் சேதமடைந்துள்ளது.

## ஆனையிறவில் கைதானவர் பலாலியில்

யாழ்ப்பாணம்,வெள்ளி

யாழ்ப்பாணத்திலிருந்து மேல்படிப்பிற்காக நோர்வே நாட்டுக்குச் செல்வதற்காக பஸ்ஸில் கொழும்பு சென்றுகொண்டிருந்த சமயம் ஆனையிறவில் கைது செய்யப்பட்ட அரியாலையைச் சேர்ந்த மாணவனுன ஜெயந்தன் தற்சமயம் பலாலி இராணுவ முகாமில் இருக்கிருர்.

இவரை விடுதலை செய்வது தொடர்பாக விசாரணை செய்வதற்காக இவரின் தாயாரை இராணுவ முகாமுக்கு வருமாறு பலாலி இராணுவ முகாம் அதிகாரி அழைத்துள்ளார் எனத் தெரிகிறது. [ச]

## அதிரடிப்படையால் ஆறு பேர் கைது

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு விமான நிலையத்துக்குச் செல்லும் வீதியில் அதிரடிப்படையினர் அவ்வீதியிலுள்ள நடுப்பகுதியில் அதிசக்திவாய்ந்த கண்ணிவெடி ஒன்றைக்கண்டுபிடித்துவெடிக்கவைத்துச் செயலிழக்கச்செய்துள்ளனர்.

நேற்றுக்காலை இச் சம்பவம் இடம்பெற்றது.

இச்சம்பவம் தொடர்பாக மட்டக்களப்பு பிரஜைகள்குழு செயலாளர் சட்டத்தரணி சாம. தம்பிமுத்துவின் கார்ச்சாரதி எஸ். சிவலிங்கம் (50 வயது)உட்பட அச்சுற்ருடலில் காணப்பட்ட 6 நபர்களை அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர். [மா]

## கனடா சென்றவர்கள் மீது விசாரணை நடத்தப்படும்

கொழும்பு, வியாழன்

கனடா சென்றடைந்த 155 இலங்கைத் தமிழர்களில் எவராவது, தமிழ் தீவிரவாத இளைஞர்களுடன் சம்பந்தப்பட்ட குற்றவியல் நடவடிக்கைகளுடன் தொடர்புள்ளவர்களெனக் காணப்பட்டால், அவர்கள் இலங்கைக்குத் திருப்பியனுப்பப்படுவார்களென கனடிய குடிவரவு குடியகல்வு கனிஷ்ட அமைச்சர் ஜெரி வெய்னர் தெரிவித்துள்ளாரென கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கிலத் தினசரியொன்று தெரிவித்துள்ளது.

ஜெரி வெய்னரை மேற்கோள் காட்டிச் செய்தியைப் பிரசுரித்த அப்பத்திரிகை மேலும் தெரிவிக்கையில் குறிப்பிட்ட கனிஷ்ட அமைச்சர் இத் தமிழர்கள் பற்றி விசாரணை செய்து, அறிக்கை சமர்ப்பிப்பதற்கு விசாரணைக் கமிஷன் ஒன்றை நியமித்துள்ளாரெனக் கூறியுள்ளது.

## மரண அறிவித்தல்

### செல்லையா சிவராசலிங்கம்

புன்னுலைக்கட்டுவன் தெற்கு, செல்லையா சிவராசலிங்கம் காலமானுர். அன்னுர் மல்லிகாதேவியின் அன்புக் கணவரும் நிர்மலன், பிரியதர்சினி, பிரபாசினியின் அன்புத் தந்தையும் சுன்னுகம் பொன்னையா தம்பதிகளின் மருமகனுமாவார். அன்னுரின் பூதவுடல் 29-8-86 இன்று பிற்பகல் 2·00 மணிக்கு புன்னுலைக்கட்டுவன் மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர் நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C-4317) தகவல்: பொ. சிவபாலசுந்தரம்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1986-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu. P O. Box 49. Telegram, Eelanadu. Telephone: 22389—24126.